இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

வாரஸ்ரீ

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

கவிஞர் வாரஸ்ரீ

மாயன் பதிப்பகம்
3A டி.பி. கோயில் II தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-600 005

முதற் பதிப்பு : டிசம்பர், 1992

விலை : ரூ. 12-00

BIBLIOGRAPHICAL DATA

Titie of the Book	:	RAMANUJAR PILL
Language	:	Tamil
Authour	:	VAARASREE V.R. SREENIVASA RAGHAVAN M.S
Date of Birth	:	30th March 1960
First Edition	:	December 1992
Copy Right holer	:	Author
Paper used	:	10.7 Sheshasayee
Size of the book	:	18.6 cms × 12.5 cms
No. of Pages	:	100 pages (20 + 80)
Price	:	Rs-12-00
No. of Copies	:	1000
Publisher	:	Mayan Pathippagam Madras-600 005
Printer	:	Moovendhar Achag Royapettah Madras-600 014
Subject	:	Tamil poems

THIS BOOK

Is printed and published with the financial assistance of Tirumala-Tirupati Devasthanams under their scheme "Aid to publish religious books".

பாராட்டுரை

செந்தமிழ் வேதியர்
குமாரவாடி சே. இராமாநுஜாச்சாரியர்
தலைவர் 'திருமாலடியார் குழாம்'
ஆசிரியர் 'திருமால்'

பொங்கும் பரிவால் இறைவனுக்கே வாழ்த்துரை வழங்கி கியவர் பெரியாழ்வார். பகவான் கண்ணனுக்குப் பிள்ளைத் தமிழ் பாடியவரும் அவரே.

அன்பின் நிலைகளில் தாயின் அன்பே தலையாயது. யசோதை நிலையை ஏறிட்டுக்கொண்டு பிள்ளைப் பருவங் களுக்கேற்ப பாடல்களை வழங்கித் தமிழுக்கு வளம் சேர்த் தவர் பெரியாழ்வார்.

இறைவனை விடுத்து அடியார்திறத்து தம் அன்பின் வெள்ளத்தை மடைமாற்றிய பக்தர்களுள் பலர் பிள்ளைத் தமிழ் பல பாடியுள்ளனர். சடகோபன் பிள்ளைத்தமிழ் ஆண்டாள் பிள்ளைத்தமிழ் போன்றவற்றைக் குறிப் பிடலாம்.

அடியார்கள் திறத்துப் பெருகிய அன்பு வெள்ளத்தை முற்றூட்டாக ஆசார்யர் வயத்ததாக்கி வாழ்வு பெறுவது சம்பிரதாய சாரமறிந்தோரின் செயலாகும். அத்தகைய நற்பணியே வாரஶ்ரீயின் இந்த நூற்பணி.

கவித்திறனும், இறைப்பற்றும், சமய மரபுப் புலமையும் வாய்ந்த இளைஞர் வா.ர. ஶ்ரீனிவாசராகவன். அடியே னுக்கு உற்ற அருமை நண்பர். திருமால் அடியார் குழாம் தொண்டர்களில் ஒருவர். இராமாநுசர் காலத்து திருக் கோளூர் பெண்பிள்ளையின் நல்ல வார்த்தைகளை இளவல் களுக்குச் சுவைபட ஊட்டி வருபவர்.

இராமாநுசர் மீது கொண்ட பேரன்பின் விளைவாக தம் புலமை, கற்பனை, கவித்திறன் கொண்டு இந்நூலை ஶ்ரீ வைஷ்ணவ உலகுக்குத் தந்துள்ளார்.

யாப்பறி புலவரின் மரபுக்கவிதையில் உதித்த இந்நூல் கருத்துகளில் பல புதுமைகளை ஏற்று இராமாநுசரைப் போன்றே வளர்ந்துள்ளது.

அவையடக்கமே ஓர் அழகு! ''குண்டூசி கூர் கொண்டு சிற்பம் வடிக்க முற்படுவதை' குறிப்பிட்டிருப்பது ஓர் புதுமை மங்கை மன்னன் நடையில் மிடுக்குடன் நூல் தொடங்கு கிறது!

காப்புப் பருவத்தில் திருமாலின் பல்வேறு மூர்த்தி களையும் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

இனியவற்றைச் சுவைக்கும் நாவில் கற்பனைக் கற்கண்டை இடுகிறார் செங்கீரைப் பருவத்தில்.

தாலாட்டில் இராமநுசரின் அரிய செயல்கள், புகழ் பொங்கி யெழுகிறது.

வரலாற்றுக் குறிப்புகளுடன் தத்துவ போதமும் தாங்கி வருகிறது சப்பாணிப் பருவம்.

இராமாநுசரின் திருவாக்கில் சிந்திய நல்முத்துக்களைப் போன்றே முத்தப்பருவம் ஒளி விடுகிறது.

வருண தருமம், சாதிச்செருக்கானபோது வைணவத்தின் மேன்மைகளை உயர்த்திக் காட்டும் பான்மையில் புதுமைக் கருத்துடன் வருகைப்பருவம் வருகிறது.

சந்திரனுக்கு மனிதன் செல்லும் காலத்திற்கேற்ப அம்புலிப் பருவத்தில் அறிவியலைப் புகுத்தியுள்ளார் ஆசிரியர்.

சம்பிரதாயக் கருத்துக்களைச் சிதையவிடாமல் ''சிற்றில்'' இழைத்துள்ளார்.

சிறுபறைப் பருவம் திருமால் பெருமையுடன் இராமா நுசரின் சீர்பரவுகிறது!

சிறுதேர் உருட்டி பெரும்புகழ் ஈட்டும் பெரும்பூதூர் பிள்ளையை ஆசார்ய முடிமணியாக திகழ வைத்துள்ளார் இப்பிள்ளைத் தமிழில்.

இராமாநுசர் பிள்ளைத் தமிழ் பாடி வாரஸ்ரீ அழியாப் புகழ் தேடியுள்ளார். அவரை வாழ்த்துகிறேன்.

இதுபோன்று ஸ்ரீவைஷ்ணவ உலகுக்குப் பல நூல்களை வழங்குதற்கு அவருக்கு அறிவாற்றலையும் உள உடல்நலங் களையும் நல்க வேண்டும் என்று திருமால் திருவடிகளில் இறைஞ்சி நிற்கிறேன்.

நித்யஸ்ரீ நித்ய மங்களம்.

சென்னை
26-6-92

சே. இராமாநுசன்

வாரஸ்ரீ

வேதக் கடலைக் கடைந்ததனால்
விளைந்த விசிஷ்டாத் வைதமெனும்
போதக் களிநல் அமிழ்தத்தின்
புனிதச் சுவையை நமக்கெல்லாம்
நாதக் குழைவோ டளித்தவனை
நம்பன் இராமா னுசமுனியை
சீதப் பிள்ளைத் தமிழாலே
தெரியப் பாடும் வாரஸ்ரீ.

பாட்டுச் சொற்கள், மாமுனிவன்;
பாதம் பரவும் மலர்களெனக்
கூட்டும் பக்தி மணத்தினிலே
குழையும் நெஞ்சம் பல்விதமாய்
மீட்டும் பண்ணின் அலைகளிலே
மிதக்கும் நம்முன் மாமுனியைக்
காட்டும் கவிதை வரிகளினைக்
கதையாய் வரையும் வாரஸ்ரீ.

நா. சீ. வரதராசன்

டாக்டர் மதி சீனிவாசன் எம்.ஏ., பி.டி , பிஎச்.டி.,
தமிழ்ப் பேராசிரியர், துறைத்தலைவர்,
து.கோ. வைணவக் கல்லூரி,
சென்னை-600 106

தேதி : 20-6-92

அணிந்துரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் பிள்ளைத்தமிழ் நூல்களின் எண்ணிக்கை மிக அதிகம்; கண்ணனைக் குழந்தையாகக் கண்டு களித்த பெரியாழ்வார், தம் பிரபந்தத்தில் பிள்ளைத் தமிழுக்கு வித்திட்டார். கண்ணன் பிறப்புத் தொடங்கி அவன் வளர்ந்த வரலாற்றை அழகுத்தமிழ் இசையில் அவர் பாடிப் பரவினார். அவரைத் தொடர்ந்து பாடிய தமிழ்க் கவிஞர்கள் பிள்ளைத் தமிழுக்கென்ற தனிவடிவத்தையும் அமைப்பையும் படிப்படியாக உண்டாக்கிப் பிரபந்த வகைகளில் தனி இடம் அமையுமாறு செய்தார்கள். குமரகுருபரர், பகழிக்கூத்தர் இருவரும் பிள்ளைத்தமிழ் வேந்தர்களாகத் திகழ்ந்தார்கள்.

மரபை ஒட்டிய பிள்ளைத்தமிழ் இலக்கணத்தைப் பின்பற்றித் தற்காலக் கவிஞர் திரு. வாரஸ்ரீ அவர்கள் 'இராமானுசர் பிள்ளைத் தமிழ்' என்னும் இந்நூலினை ஆக்கி அளித்துள்ளார். அவர்தம் பெருமுயற்சி பாராட்டத்தக்க நல்லதொன்றாகும். 'சந்தனச் சரங்கள்' என்னும் கவிதை நூலினை முன்பே எழுதி வெளியிட்டுள்ள கவிஞர் 'வாரஸ்ரீ' சிறந்த கவி உள்ளம் வாய்க்கப் பெற்றவர். சந்தவகைகளில் கவிபாடும் சதிர் இயல்பாகவே பெற்றுள்ளவர். இவரது 'இராமாநுசர் பிள்ளைத் தமிழ்' அரிய பல சிறப்புகளைப் பெற்றுள்ள பான்மை இவரது ஆற்றலை மேலும் தமிழுலகுக்குப் பறை சாற்றுகிறது.

பொங்கிப் புறப்படுகிற உணர்ச்சிப் பிரவாஹமே சிறந்த கவிதையின் ஆத்மா ஆகும். கற்பனையாகிற சதையும் எலும்பும் கொண்ட உடம்பு அதை உள்ளடக்கி உள்ள வடிவம் ஆகும். இதயநாதமே அதற்கு ஓசையாக லயத்தை ஒலிக்கச் செய்யும். அழகும் நளினமும் சேர்கிற தோற்றம் அதன் ரஸநீர்மை ஆகும். ஆகவே, உணர்ச்சி, கற்பனை, ஓசை, வடிவம், சொல்லாட்சி ஆகியவை ஒன்றுக்கொன்று முரண்படாது ஒருமைப்பட்ட ரஸநீர்மையே சிறந்த கவிதையாக ஒளிவிட முடியும்.

கவிஞர் வாரஸ்ரீயின் இந்தப் பிள்ளைத்தமிழ் நூலில் அருமையான தமிழ்க்கவிதை மரபு காப்பாற்றப்படுகிறது. ஆசிரியர்தம் தமிழ் இலக்கியப் பயிற்சி, யாப்பிலக்கண அறிவு, வைணவ குருபரம்பரை நூற்பயிற்சி ஆகிய மூன்றனையும் இந்நூல் மிகவும் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

உணர்ச்சியும் கற்பனையும் ஒன்று சேர்ந்து ஓசை லயத்தில் வடிவம் பெறுகிற பொழுது கவிதை வெல்கிறது என்பதற்கு இதோ ஓர் எடுத்துக்காட்டு :

''விண்ணில் ஏழாய் விரிகின்ற
வில்லில் வண்ணக் கணையாக
விடுபட்டுலவும் எழில் ஜாலம்
விழியைத் தாக்கித் தருமின்பம்
மண்ணில் கண்ணன் கருணையினால்
வண்ணம் சிந்தும் சோலைதனில்
மலர்ந்த அழகுப் பூவீசும்
வாசம் ஊட்டும் நல்லின்பம்
பண்ணில் ஆழ்ந்த செவியினிலே
பாயும் இன்ப இசையின்பம்
பலவாய்ப் பிரிந்த இன்பமெலாம்
படிக்கும் போதே நமை ஈர்க்கும்
வண்ணத் தமிழின் வளநாட்டில்
வளர்ந்தோய்! ஆடாய் செங்கீரை

மங்காப்புகழே எதிராசா!
மறையே! ஆடாய் செங்கீரை''

கண்ணிற்கின்பமான வானவிற்காட்சி,சிந்துப் பூ திகழுட சோலைக்காட்சி, செவிக்குத் தேன் என்னும் இசை இன்பம் எல்லாம் திகழும் தமிழ் வள நாட்டுக் காட்சியைக் கண்டு கொண்டே, இராமாநுசக் குழந்தை தன் தலையை ஆட்டிச் செங்கீரை போல் ஆடுவதை இக்கவிதை காட்டுகிற தல்லவா!

ஆசிரியர் வாரஸ்ரீ வளர்ச்சிச் செறிவிற்கான சிலவற்றைக் குறிப்பிட்டு அவற்றின் முறையான அடை யாளங்களையும் வரிசைப்படுத்துகிறார். பெரும்பூதூர் மாமுனியின் ஞானச் செறிவைப் பாராட்டும் செங்கீரைப் பருவப்பாடல் இன்னொன்றில் அற்புதமான கவியோட்டத் தைக் காண்கிறோம்.

'வானத்திடலின் அடையாளம் வளர்ந்து காட்டுப் செங்கதிர்' என்று தொடங்குபவர் நேரே அந்த வானின் கீழே மலர்ந்து பரந்துள்ள சோலைப் பூக்களின் வண்ணங் களைக் காண்கிறார். உடனேயே, 'வண்ணச்செறிவின் அடையாளம் மலர்ந்து காட்டும் பூங்கா' என்கிறார். சூரிய வானும் சுந்தர மலர்க்காவும் சேர்ந்ததும் கவிஞரைக் கானப் இசைக்கத் தூண்டுகின்றன; 'வாரஸ்ரீ' அந்தக் கானச் சிறப்பை ஏழு ஸ்வரங்களில் அடையாளம் காண்கிறார் இவற்றிற்கு முத்தாய்ப்பு வைப்பது போல், மேலே அவர் ''கவிதைச் செறிவை அடையாளம் கனிந்து காட்டுப் கற்பனை'' என்கிறார்- இவைகளை எல்லாம் எதற்காகத் தொகுத்தார் என்று நாம் எண்ணுகிறபொழுது அந்தக் கவிதையின் கடைசிவரி இராமாநுசருடன் இவற்றை இணைத்துக் காட்டுகிறது. இதோ அவர் கவிதையைப் படியுங்கள்! இல்லை; இல்லை; வாய்விட்டுப் பாடுங்கள்!

''தானம் தருமம் அன்புவழிச்
சாரம் கருணைப் பண்பையெலாம்
சாரும் உலகை அடையாளம்
சரியாய்க் காட்டும் தமிழ் நாட்டில்
ஞானச்செறிவாய்ப் பூத்த எழில்
நயமே! ஆடாய் செங்கீரை
ஞாயிற்றொளியே! பெரும்பூதூர்
நாதா! ஆடாய் செங்கீரை''

ஆசிரியரின் இந்த 'அடையாளப்' பாட்டு. ஒரே சொ
ல தடவை விழும்பொழுது உண்டாக்கும் சொல்லாட்சி
றப்பை எவ்வளவு துல்லியமாய் எடுத்துக்காட்டுகிறது!

ஆசிரியர் கற்பனை வளம் கொண்டவர் என்பதைப் ப
டங்களில் காண்கிறோம். ''சிமிழைப் போலும் சிறுவதர
சவ்வாய் மழலை பேசுகையில்'' என்கிற வரியில் குழந்
தழ்கள் மூடித்திறப்பது சிமிழின் தோற்றத்தை நம் க
ன்னே கொண்டு வந்து விடுகிறது.

''பச்சை நிறத்தில் மலை வரிசைகளைப் பனியை
டும் சிகரங்களைப் பள்ளத்தாக்குகளை, படர்ந்து விரிய
ான வகைகளைப் பார்க்கும் வாரஸ்ரீ அங்கே மேலிருந்
ழே கொட்டும் அருவியைப் பார்க்கிறார்.

''கச்சைத்துணிபோல் நீர்வீழ்ச்சி ககனம் பிறந்த கார்
கை'' என்று உணர்ச்சிக் குமுறல்களைக் கொட்டுகிறா
ந்த வரிக்குக் கீழேயோ பாரதியாரை அவர் பயில்
ான்மை வெளியிடப்படுகிறது. 'காவிரி வைகை பொரு
தி கனிந்த பெண்ணை பாலாறு' என்று ஆசிரியர் வரி
டுத்தும் வகை, 'காவிரி தென் பெண்ணை பாலாறு த
ண்டதோர் வையை பொருனை நதி' என்னும் பாரதி
மர வரியை நினைவுபடுத்துகின்றதன்றோ!

ஆசிரியரின் கற்பனைத்திறன் இந்நூலில் பல இடங்க
ாணப் பெறினும், 'அம்புலிப் பருவப்' பாடல்கள் அனை

திலும் தனி இடம் பெறுகிறது. ஒரே ஒரு எடுத்துக் காட்டு
தந்து மேலே செல்கிறேன்.

''வெள்ளையாய் ஆடையிட்டு
விரைகிறாய் மெதுவாய் விண்ணில்
தெள்ளிய வைண வத்தைத்
திண்மையாய்க் காக்க உன்போல்
வெள்ளையாய் ஆடை யிட்டே
விரைந்தவன் பெரும்பூ தூரன்
அள்ளவே அழைக்கின் றான்; ஓ!
அம்புலீ! ஆட வாராய்.''

ஆசிரியர் கையாண்டுள்ள சொல்லாட்சித் திறன் பாராட்டுக்குரியது. 'துறவோர் அரசே! எதிராசா!' என்று அவர் அழைக்கின்ற பொழுது இது தெளிவாகப் புலப் படுகிறது. 'துலங்கும் வைணவ தருமத்தின் துணை' என்று இராமாநுசருக்கு இன்னொரு பட்டம் சூட்டுகிறார். 'நெல் லாளும் காவிரியை நிதம் ஆளும் பரமன்'' என்று ஓரிடத்தில் இறைவனைப் பற்றிக் குறிப்பிடும் வரி அமரத்துவ கவிதை ஆகிவீடுகிறது. திருமாலின் தோற்றத்தை அவர் அருமை யான சொல்லாட்சிக்குள் கொண்டு வந்து நம் கண் முன்னே தோன்றச் செய்யும் அற்புதத்தை இதோ அடியிற்கண்ட கவிதையில் பாருங்கள்.

''ஒளிரும் மகர குண்டலங்கள் ஒப்பில்லாத கழுத்தாரம்
ஒளிமார்பினிலே முத்து வடம் ஒட்டி அணைக்கும்
தோள் வளைகள்
குளிர்மேனியிலே திருமச்சம் குருமா மணிப்பூண் கடகம்
எனும்
குற்றமிலாத அணி வகைகள் குலவத் தோன்றும்
செங்கண்மால்'

என்று ஒவியம் தீட்டி உள்ளார். நம்மிடம் குலவுவதற்கு என்று நம்முன் தோன்றும் திருமாலா அல்லது நாய்

கொஞ்சிக் குலவி விளைய ஆசைப்படும்பொழுது, நம் முன்
தோன்றும் திருமாலா என்னும் இருதொனிப் பொருள்களு
ஒருசேர அடங்கி உள்ள தொடர் சிறந்த சொல்லாட்
பெற்றுள்ளது. 'குலவத் தோன்றும் செங்கண்மால் என்
கூறிக் கூறி மகிழ்கிறோம்.

இந்நூலாசிரியர் வைணவ ஆசார்ய குருபரம்பரை நூ
களை நன்கு பயின்றுள்ள விதத்தைப் பல இடங்களிலு
இந்நூலில் காண்கிறோம். சப்பாணிப் பருவ முதற்பாடலி
ஆளவந்தார் இராமாநுசரை, 'ஆம் முதல்வன்' என்று அரு
பாலித்ததைக் குறிப்பிடுகிறார். இப்பருவத்தில் உள்ள 4,5,
எண்ணுள்ள பாடல்கள், ஆளவந்தார் ஈமச்சடங்கில் இராம
நுசர் கொடுத்த வாக்குறுதிகள் மூன்றினையும் குறிப்பி
கின்றன.

முத்தப்பருவம் முதற்பாடல் இராமாநுசரின் 'சரண
கதிகத்யப்' பொருளைத் தாங்கியதாய் அமைகிறது. சிற்றி
பருவ மூன்றாம் பாடல் இராமாநுசர் திருமந்திரத்தை
உலகிற்குப் பரக்க அருளிய கொடைப் பண்பைப் பகருகிறது
அதே பருவத்தில் ஏழாம் பாடல் வைணவனுக்கு இருக்
வேண்டிய ஆசார்யபக்தியை அப்படியே படம் பிடிக்கிறது
சிறு தேர்ப்பருவ முதற்பாடல் ஆண்டாளின் மனோரதத்தை
இராமாநுசர் செயற்படுத்தியதைக் குறிப்பிடுகிறது. அதே
பருவத்தில் இரண்டாம் பாடல், குறுங்குடி நம்பிக்கு
எம்பெருமானார் ஆசாரியன் ஆன வரலாற்றை
குறிக்கிறது.

இவ்வாறு பல இடங்களில் இராமாநுசர் தம் வாழ்க்கை
குறிப்புகள் இடம் பெறும் அழகு நூலின் சுவையை மேலு
உயர்த்துகிறது.

கவிஞர் வாரஸ்ரீ தம் முன்னோர்களான பெரு
கவிஞர்களை அடியொற்றிவந்துள்ள அழகு இந்நூலுக்கு
மேலும் ஏற்றம் சேர்க்கிறது. திருமங்கை ஆழ்வார், நம்மாழ்

வார், கம்பன், பாரதி, பாரதிதாசன் ஆகிய கவிஞர்களின் சொல்லாட்சிகளைத் தகுந்தபடி கையாண்டுள்ள விதம் ஆசிரியரின் ஆக்கத்திறனோடு ஒன்றிப் புதுமெருகு சேர்த்து விடுகிறது.

'நீர்வண்ணன், கார்வண்ணன், கடல்வண்ணன். ஊ வண்ணன்' என்று அடுக்குகிற பான்மை திருமங்கை ஆழ்வா திருநெடுந்தாண்டகப் பாடலை நினைவுறுத்துகிறது கனியிடை ஏறியசுளையும்' என்று தொடரும் பாரதிதாச தமிழ்க்கவிதையின் எதிரொலியை, ''கன்னல் இளநீ கற்கண்டு'' என்று தொடங்கும்இவர் செங்கீரைப் பருவமுத பாடலில் ாண்கிறோம். வருகைப் பருவ முத பாடலிலும் பாரதிதாசன் இவருக்குக் கொடுத்துள்ளதூண் தலைக் காண்கிறோம். 'முத்தியோ சிலரின் சொத்தெ இருக்கையில் இத்தமிழ்நாடுதன் இருந்தவப் பயனாய்இராம நுசனை ஈன்றது' என்னும் பாவேந்தர் வரியின் தாக்க அங்கே மிளிர்வதைக் காண்கிறோம். சிறந்த கவிஞர்க தம் முன்னோர் மொழிகளைப் பொன்னே போல் போ றுவர் என்பதற்கு வாரஸ்ரீயின் இத்தகைய சிலவரிக எடுத்துக் காட்டாய்த் திகழ்கின்றன.

இந்நூலாசிரியர் அறிவியற் கலைஞரும் ஆவா என்பதை அவர்தம் கவிதையில் காண முடிகிறது. பழை யைத் தொடர்ந்து செல்லும் இவர்தம் கவிதை, பழ மையின் பொருளற்ற வாதங்களை ஏற்றுக்கொள்ளவில்லை அம்புலிப்பருவம் இரண்டாம் பாடலில், ஆசிரியர் சந்தி கிரஹணத்தைத் தமிழ் மரபை ஒட்டிக் கூறவில்லை அறிவியற் கூறுபாட்டுப்படி உள்ள அருமையான விள கத்தை அங்குக்குறிப்பிடுகிறார்.

''நாகமோ வாயில்கவ்வ நகர்வதாய்ச் சொல்வார்; பூ
பாகமோர் நிழலைத் தந்து படர்வதை அறியார்;
பாம்பி

தேகமாம் இளையாழ் வான்மேல் திரையிடும் நிழலே
இல்லை
ஆகவே அழைக்கின்றான் ஓ! அம்புலி! ஆடவாராய்!'

இந்த மிக அருமையான கவிதை ஒன்றே போதும் ஆசிரியர் ஆக்கக்கற்பனை மிக்க அருமைக் கவிஞ என்பதற்கு.

வைணவ சம்பிரதாயச் செய்திகளை இந்நூலாசிரிய எங்குமே தியாகம் செய்யவில்லை. தேவைப்படும் இட களில் அவர் அவற்றைக் கையாண்டுள்ள விதம் நூலின் பெருமைக்கு மேலும் அழகு சேர்க்கிறது.

'தன்னாடு விட்டு இந்த நன்னாடு வந்து' என்னு தொடர் எம்பெருமானின் நித்திய விபூதி, லீலா விபூ ஆகிய இரண்டையும் குறிப்பிடுவதாகும். தெளி விசும்பாகி திரு வைகுந்தத்தின் சிறப்பை விடவும் இந்நில உலகே பெருமை உடையது என்பதனைஆழ்வார்கள் வழியே நிற்கு ஆசிரியர் 'தன்னாடு' என்று மட்டும் குறித்துவிட்டு, 'இந் நன்னாடு' என்று நயமாக வேறுபடுத்துகிறார். எம்பெரு மான் இந்த நிலவுலகை அதிகம் விரும்பக் காரணம் இது மிகுந்த நன்மை உடையதாகலின் என்று பொருள்படு படியாகச் சொற்களைப் பெய்துள்ளார்.

''மண்ணிருந்தே ஓங்கி விண்ணளந்தே நின்ற மாயவன்' என்னும் ஆசிரியரின் வரி ஒன்று மேற்கண்ட நயம் போலவே அருமையான நயம் கொண்டதாகும். இதில் நூலாசிரிய திரிவிக்கிரமாவதாரச்சிறப்பினை மிகத்துல்லியமாகஎடுத்து காட்டுகிறார். ஆழ்வார்கள் பல இடங்களில் 'விண்ணுளா ரிலும் சீரியர் இம்மண்ணுளாரே' என்று குறிப்பிடும் பெருண் மையை ஆசிரியர் இங்கு அருமையாய்க் கையாண்டுள்ளார் திரிவிக்கிரமனான எம்பெருமான் ஓங்கி நின்ற இட இம்மண்தான். இந்த மண்ணின் மீது நின்று கொண்டே அவன், இம்மண்ணிற்கப்பாற்பட்ட விண்ணை அளந்தான்

என்றால் இம்மண்ணின் பெருமை எவ்வளவு உயர்ந்தது
தேவர்களை விடவும் இப்பூவுலக மாந்தரே எம்பெருமா
உகப்புக்கு உரியவர் என்னும் உட்பொருளை, ஆசிரிய
இவ்வரியிலே அடக்கி உள்ளார்.

சப்பாணிப் பருவ இரண்டாம் பாடல் இறைவன் பற்றி
வைணவ தத்துவத்தை விவரிக்கிறது. பகவான், சத்தியம்
ஞானம் ஆகியவற்றின் வடிவம். 'அவனது ஞானம்
வளர்ச்சி, தேய்தலுக்கு ஆட்படாதது; என்றும் நிலை
யானது' என்னும் அரிய கருத்தை ஆசிரியர் இப்பாடலி
விளக்கி உள்ளார்.

''உரமான ஞானத்தின் தோற்றமென்றும்
உண்மை என்றும் எல்லையற்று விரிதல் என்றும்
பரவாது குறையாது விளங்கல் என்றும்
பாரினிலே முதலில்லாப் பொருளே என்றும்''

என்று இறைவனின் தனித்தன்மையை இராமாநுச
விளக்கியதாக இப்பாடலில் ஆசிரியர் குறிப்பிடுகிறார்
''மாசூணாச் சுடருடம்பாய் மலராது குவியாது, மாசூண
ஞானமாய் முழுதுமாய் முழுதியன்றாய்'' என்னும் நம்மா
வாரின் பாசுரத்தை அடியொற்றி அமைந்துள்ள விதப
பாராட்டத் தக்கதன்றோ!

ஆசிரியர் வாரஸ்ரீயின் இந்தக் கவிதை நூல் தமி
உலகிற்கும் வைணவ உலகிற்கும் மிகச் சிறந்த ஒரு பரிசாகும்
மரபு வழுவாத தமிழ்க் கவிதைக்கு இந்நூல் சிறந்த ஓ
எடுத்துக் காட்டாகும். இராமாநுசரைப் பற்றிய பிள்ளை
தமிழ் நூல் இதுவே முதன் முதலாகும்.

அருமையான சிறந்த கவிதைநூல் எழுதி அளித்துள்
கவிஞர் வாரஸ்ரீ மேன்மேலும் இது போன்ற பல நூ
களைத்தமிழ் உலகுக்குத் தந்து புகழ் பெறுவராக! அவர்த
முயற்சி வெல்க!!

தமிழுலகமும், சிறப்பாக வைணவ அன்பர்
இந்நூலை வாங்கிப் படித்துப் பயன்பெற வேண்டும்
அன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

சென்னை-83 அன்பன்
20-6-92 ம. தி. சீனிவா

எழுதியவன் எழுதுகிறேன்

இராமாநுசன்—வைணவத்திற்கு மறுபெயர்

இராமாநுசன் – வேனிற்கால நடுப்பகலின் கதிரொ ரியை மிஞ்சி வெளிச்சமிட்ட ஞானச் சூரியன்.

இராமாநுசன்—பல புரட்டுகளைப் புறமுதுகிட்டு ஓட செய்து புதுயுகம் படைத்த ஆன்மிகப் புயல்,

இந்தப் புயல் வீசியபோது தென்றலில் தாலாட்ட பட்டதைப் போல் இதமடைந்த இதயங்கள் எத்தனை?

முகவரியே இல்லாமல் தொலைந்து போன பொய மேகக் கூட்டங்கள் எத்தனை?

சமுதாய மறுமலர்ச்சி இலக்கியம் தனது அத்திய பத்தில் இணைத்துக் கொண்ட புதுமைச் செய்திகள் எத்தனை?

கோட்டியூர் கோபுரத்தின் உச்சியிலிருந்து ஒலித்த வாய்மொழி மந்திரம் கேட்டு, தங்கள் குடிவழிக்கே முக்தி யைக் கொள்முதல் செய்த கூட்டம் எத்தனை?

சிலருக்குத் திறந்து சிலருக்குத் திறக்காத மணிக் கதவு களை எல்லோருக்கும் எனத் திறந்தபோது எண்ணில மகிழ்ச்சி வெள்ளத்தில் மனம் உருகிய ஹரியின் அடிமைகள் எத்தனை?

வைணவம் என்னும் அன்பின் விதையில் தோன்றிய வைணவ மாமரம் விழுதுவிட்டுப் பலமாகப் பரவுவதற்கு உரமாக வந்தவன் இராமாநுசன்.

ஆலயங்கள், மடாலயங்கள் இங்கெல்லாம் தனது முக்கோலைச் செங்கோலாக்கி அரசாட்சி செய் துறவரசன்.

ஒரு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து, பாரத மெங்கும், வலம் வந்து, பல இடர்களையும் வென்று அன்பின் பொருளை அழகாக விளக்கிய எதிராசன்.

இந்தத் திருப்பெரும்புதூர் தலைவனின் புகழை எத்தனையோ கட்டுரைகள், வரலாற்று நூல்கள், காவியங்கள் விளக்கமாகப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. அடியேனுக்கும் அவனது புகழைப் பாட வேண்டும் என்ற அவா நெடுநாட்களாக இருந்து கொண்டிருந்தது. இராமானுசனைப் பாட்டுடைத் தலைவனாக்கி ஒரு பிள்ளைத் தமிழ் எழுதலாமோ? என்ற எண்ணம் ஏற்பட்டபோது, அந்த எண்ணத்தை முன்மொழிவதுபோல அமைந்தது திருமலை திருப்பதி தேவஸ்தானத்தாரிடமிருந்து வந்த நிதி உதவிக்கான விண்ணப்பப் படிவங்கள். தனக்குச் சங்கம் சக்கரம் ஈந்தவனின் புகழைப் பாடுவதற்கு எனக்குக் கிடைத்த திருங்வேங்கட நாதனின் ஆணையாக அதனைக் கருதி அவனருளால் இந்த நூலை எழுதி முடித்தேன்.

இராமாநுசர் பிள்ளைத்தமிழ் அழகிய நூலாக வெளிவர நிதியுதவி அளித்துள்ள திருமலை திருப்பதி தேவஸ்தானத் தாருக்கு எனது முதல் நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

நூலின் கைப்பிரதியைச் சரிபார்த்துக் கொடுத்ததோடு அல்லாமல் பாராட்டுப்பா ஒன்றையும் வழங்கி என்னைப் பெருமைப்படுத்தியிருக்கும் கவிமாமணி நா.சீ. வரதராசன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

எனது நூலுக்குச் சிறப்பான ஆய்வுரை ஒன்றை வழங்கி இருக்கின்ற சென்னை து கோ. வைணவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியரும் துறைத் தலைவருமான **டாக்டர் மதி. சீனிவாசன்** அவர்களுக்கு அடியேன் என்றென்றும் கடமைப்பட்டவன். டாக்டர் மதி. சீனிவாசன் அவர்களின் தமிழ் மற்றும் வைணவ ஆராய்ச்சியின் ஆழம் மிக்க வளப்

எனது நூலில் உள்ள அவரது அணிந்துரை அமுதத்தை
பருகுவோர் கண்டிப்பாக உணர்வார்கள்.

பாராட்டுரை வழங்கிய திருமால் இதழின் ஆசிரியர்
திருமால் அடியார் குழாம் தலைவர், செந்தமிழ்வேதிய
குமாரவாடி சே. இராமானுஜாச்சாரியர் அவர்களுக்கும்,

இந்த நூலில் இடம் பெற்றுள்ள சில படங்களின்
பிளாக்குகளைக் கொடுத்துதவிய யதிராஜ பாதுகா இதழின்
ஆசிரியர் டாக்டர் V.V. ராமானுஜம் அவர்களுக்கும், கல
வல்லி இதழின் ஆசிரியர் காண்டீபன் அவர்களுக்கும்,

முகப்போவியத்தைச் சிறப்பாக அமைத்துத்தந்த நண்ப
ஓவியர் திரு. ஜமால் அவர்களுக்கும்,

அழகிய முறையில் அச்சிட்டுத்தந்த இலக்கியச் சுட
மூவேந்தர் முத்து அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்
கின்றேன்.

உங்கள் கரங்களை வருடும் இந்த நூல் எல்லையில்லா
புகழ்கொண்ட இராமானுசனின் புகழை இம்மியளவேனு
தாங்கி இருக்கின்ற எண்ணத்தை ஊட்டினால் அது இந்நூ
பிறந்த பயனைப் பெற்றதாக அடியேன் கருதுவேன்.

அன்புடன் என்றும்
வாரஸ்ரீ

வாழி எதிராசன் !

பிழைத்திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	2	மகிழ்வுற்றத்	மகிழ்வுற்ற
2	5	முனையாகக்	முனையைக்
6	7	திரை	திரைத்
7	9	பாரபரப்பை	பார்ப்பரப்பை
7	10	சுருட்டி	சுருட்டிக்
7	24	இராமனுசன்	இராமானுசன்
8	13	சோரும்படிக்	சோரும்படி
8	15	இராமனுசன்	இராமானுசன்
9	1	ஓங்கி	ஓங்கிப்
9	7	இராமனுசன்	இராமானுசன்
11	9	மானிடத்	வானிடத்
11	9	வானிடத்	மானிடத்
11	13	கானிடை	கானிடைச்
11	13	பதவியை	பதவியைக்
18	17	பயிரை	பயிரைப்
22	2	கடல்மிசை	கடல்மிசைத்
22	17	கதிர்குலம்	கதிர்க்குலம்
25	13	ஏறி	ஏறிப்
25	16	சாரதியை	சாரதியைத்
26	13	தேன்மலரடியை,	தேன்மலரடியைத்
32	5	வேதச்	வேத
32	7	சாய்த்தக்	சாய்த்த



காப்பு

எந்தைஎதி ராசன் இராமா நுசன்மேல்யான்
சந்தமுடன் பிள்ளைத் தமிழ்செய்ய—சிந்தைத்
தடம்உறையும் சீரே! தரணிமுதல் என்னும்
கடவுளே! நீதான்மெய்க் காப்பு

அவையடக்கம்

மண்பேசும்; தேவர்வாழ் விண்ணும் பேசும்
மகிழ்வுற்றத் தமிழ்பேசும், வீசும் ஞானத்
தண்காற்றாம் இராமாநு சன்மேல் பிள்ளைத்
தமிழ்க்கவியை நான்யாக்கும் முயற்சி, சின்னக்
குண்டூசி ஒன்றின்கூர் முனையாகக் கொண்டு
கோயிலுக்குள் நிறுவப்போம் சிற்பம் தன்னைத்
திண்டான கருங்கல்லில் வடிக்கும் செய்கைத்
தெளிவுக்கு நிகராகும் பொறுப்பீர் நீரே!



நூல்

நீர்வண்ணன், நிலமளந்த
    நெடுவண்ணன், குழலூதும்
        நீல வண்ணன்
கார்வண்ணன், கடல்எழுந்த
    கயல்வண்ணன், கதிர்வண்ணன்
        கருடப் புள்ளில்
ஊர்வண்ணன், கூர்மத்தின்
    உடல்வண்ணன், திருமாலை,
        உயர்வாய்க் காட்டும்
சீர்வண்ணன் எதிராசன்
    செம்மையினைச் சொல்லுமிந்நூல்
        சிறக்க நன்றே.

பிள்ளைத் தமிழ்—பருவங்கள்

1. காப்புப் பருவம்
2. செங்கீரைப் பருவம்
3. தாலப் பருவம்
4. சப்பாணிப் பருவம்
5. முத்தப் பருவம்
6. வருகைப் பருவம்
7. அம்புலிப் பருவம்
8. சிற்றில் பருவம்
9. சிறுபறைப் பருவம்
10. சிறுதேர்ப் பருவம்

ஸ்ரீராமாநுசர் பிள்ளைத்தமிழ்

காப்புப் பருவம்

பொன்னாரம் முத்தாரம் மின்மார்பில் மணியாரம்
பொலிகின்ற தேவனாகி,
பூம்பட்டு மெத்தையெனச் சாம்பல் நிறத்தரவில்
புகழாய்க் கிடக்கும் நாதன்

தன்னாடு விட்டிந்த நன்னாடு வந்திங்கு
தானாக மீனுமாகி
தாராள மாகஉரு ஏராளமாகி,திரை
தண்ணீரில் ஓங்கி நின்று

வன்மாயன் குதிரைமுகன் அசுரனை வீழ்த்தியே
மறைநான்கு மீட்டொளிர்ந்து
மனுவிடம் தந்தமா மச்சப்பிரானை யாம்
வாழ்த்தியே வேண்டு கின்றோம்

தென்னாடு பெற்றதோர் குன்றாத் தவப்பயன்,
தெளிவிக்க வந்த எங்கள்
தெய்வக் குழந்தையாம் இராமானுசன் தன்னைச்
செம்மையாய்க் காக்க வென்றே!

துயில்கொண்ட பாற்கடலைத் தயிராய்க் கடைதற்குத்
தூண்என்று மலைநிறுத்தி
சூரரும் தேவரும் பாம்பொன்றினைக் கட்டிச்
சுற்றிச் சுழற்றியாட

உயிர்கொண்ட ஆமையென்றுருவாகி மலையினை
ஓடுமேல் தாங்கி நின்றே
ஓயாத வளமெலாம் உற்பத்தி செய்திட்ட
ஒருபெரும் தேவனவனை

நின்ற கோலத்தில்மயல்தாக்கும் பெண்ணாகி
உறவாடி அமுதத்தினை,
ஊட்டியே இமையவரை உய்வித்த கூர்மனை
உளமாற வாழ்த்து கின்றோம்.

ல்நின்று கூவிடும் நயம்நின்ற காவிடை
கொஞ்சிடும் பூதூர் நகர்க்
கொற்றவன் எங்கள்முனி இராமாநுசன் தன்னைக்
கோலமாய்க் காக்க வென்றே! 2

ய்க் கிடக்கின்ற பார்பரப்பை மாற்றி
பாயாய்ச் சுருட்டி கடலின்
பள்ளத்திலே கொண்டு கள்ளத் தனத்தினால்
பதுக்கினான் என்பதாலே

தாமரைப் பூவின் வண்ணத்தை விட்டு,திறன்
சேர்ந்ததோர் பன்றி யாகி
செங்கனலையே கக்கி, தங்கநிற விழியசுரன்
செயலற்று மாய்ந்து வீழ

ச் சமர்செய்து தன்நீண்ட பல்லினால்
தானிலத்தைப் பெயர்த்து
கயமாய்ச் சுழற்றிய காரண வராகனை
தாடியே வேண்டு கின்றோம்

ரப் புரட்சியைச் சிங்காரமாய்ச் செய்து
செகமிதை வாழவைத்த
செந்தளிர்க் குழவியாம் இராமநுசன் தன்னைச்
சீராகக் காக்க வென்றே! 3

மால்மீது கொண்டதொரு மாளாத அன்பினால்
மால்மந்திரம் புகன்று
மாயத்துயர் யாவும் சாயச் சிரித்தோர்
மைந்தனைக் கொல்லுதற்கு

மேல்சீறி வந்ததொரு மேனிக் கொதிப்பிலே
வேகமாய்க் கோபமுற்று
மேகவண்ணன் உறை பாகந்தனைக் கேட்க
வேய்ந்ததூண் ஒன்று காட்ட

கால்மீது தாக்கிப்பிளந்த அக்காலையில்
ககனம் வெடித்த ஒலிபோல்
காலன்கணக்கிலே காலக்கணக்கிலே
காட்சிக்கு வந்தரக்கன்

தோல்கீறியே குருதி சோரும்படிக் கொன்று
சுடர்கின்ற நரசிங்கனைத்
தோத்திரம் செய்கிறோம் இராமநுசன் தன்னைத்
தொல்லுலகில் காக்க வென்றே!

விண்ணுலகிலும் வாழும் மண்ணுலகிலும் தனது
விசையினைக் காட்டி நின்று
வேதத்தையும் நல்ல தருமத்தையும் செய்யும்
வினையையும் வாட்டி வந்த

பண்பிலாச் செய்கையான் பாடம்பெறும் வண்ணம்
பார்வையில் குறள் உருவமாய்
பாங்கினில் தோன்றியொரு மூவடியை வாங்கிஅதில்
பதமாய் இரண்டடியினால்

எண்டிசையும் ஓங்கிபெரு விண்ணையும் மண்ணையும்
எளிதாய் அளந்தபின்னால்
ஏற்றமாய் மாவலியின் போற்றற்குகந்ததோர்
இணையிலா முடியளந்து

மண்ணிருந்தே ஓங்கி விண்ணளந்தே நின்ற
மாயவனை வேண்டுகின்றோம்
வானகத் திருமதலை இராமநுசன் என்னும்
மாமுனியைக் காக்கவென்றே!

தந்தைசொல் மிக்கதொரு மந்திரம் இல்லையென
தலைமீது தாங்கியே தன்
தாயுயிர் போக்கியதைத் தான்வேண்டி மீட்டு,பின்
தன்தரம் காட்டி நின்று

முந்தியே அரசர்குலம் தந்தையைச் சாய்த்ததால்
முழுதாய் வெகுண்டு சாய்த்த
மோகனத் திருமால்எம் பரசுராமப்பரன்
முதலென்று வேண்டுகின்றோம்

விந்தையாய் இவ்வுலகு வந்தவன், தொன்மறை
விரிவாக்கம் செய்த முனிவன்
வீணாய்க் கிடந்ததோர் மானுடத் திடலினில்
விளைபயிர் கண்ட கலைஞன்

கந்தையும் கிழிசலும் காய்த்ததோர் சமயமதைக்
கவினாகச் செய்த எங்கள்
காதற் குழந்தையாம் இராமாநுசன் தன்னைக்
கண்ணெனக் காக்க வென்றே!

கார்பற்றிப் பெய்யினும் காலம் துணையென்று
கதறிப் புகன்ற பொழுதும்
கைதொட்டெடுத்து சிறு ஏரோடவில்லையெனில்
காசினிக்(கு) உணவில்லையே

பார்பற்றி நின்றுழவின் ஏர்பற்றும் மக்கள்தம்
பணிபற்றிப் பெருமை சொல்லி,
பாதகச் சிறியோரை படைகொண்டழித்தஎம்
பலராம! வேண்டுகின்றோம்

நீர்பற்றி நின்றவன், நெடுமால் எனப்பாடும்
நேமியன் தம்பியாகி
நீளுலகு வந்ததோர் ஆளும் படத்தரவன்
நெளிகின்ற வடிவ மாகிச்

சீர்பற்றி நெஞ்செனும் சிம்மாதனத்திலே
செம்மையாய் அரசோச்சிடும்
தெய்வ மறையாளன்எம் இராமாநுசன் என்னும்
செல்வனைக் காக்க வென்றே!

நாதக் குழல்தொட்டு நானிலப் பந்தினை
நன்றாய் மயங்க வைத்து
நஞ்சைக்கடித்(து) உயிரின்அச்சை முறித்துபெரு
நயவஞ்சகம் அழித்து

பாதக் கழல்தொட்டுப் பைம்படம் மீதேறி
பாம்பை இடம் பெயர்த்து
பண்ணாய்ப் பொழிந்தமுகில் விண்லண நிறுத்தமலை
பகுதியைத் தூக்கி வென்று

மோதப்பதம்வைத்து முன்வந்த யானையின்
முச்சை நிறுத்தி மாய்த்து
மூள்கின்ற தீமையின் முழுவடிவ மாமனை
முடிவாய்ச் சினந்து கொன்று
கீதப்புகழ்க் கண்ணன் கீதை புகன்றவனின்
கீழ்வீழ்ந்து வேண்டுகின்றோம்
கிரணமின் பொலிகுழவி இராமாநுசன் தன்னைக்
கேடின்றிக் காக்க வென்றே! 8

மானிடத் தன்மையதை வானிடத் தன்மையதில்
வகையாய் மறைத்து வைத்து
மாமுனிக் குழுதன்னில் மாண்புடன் சேர்ந்தவர்
வாதை கெடுத்தெறிந்து
கானிடை சென்றுதன் கதிர்குலப் பதவியை
கைவிட்டு, வாய்மை காத்து
காதகர் வீழ்ந்துவிட வேதியர் வாழ்ந்துவர
கணைவலியைக் காட்டி, அசுரர்
கோனிடம் போர்செய்து கோதையை மீட்டங்கு
குறைவிலா அரசமைத்த,
கோமளச் செல்வனாம் கோதண்டராமனைக்
கும்பிட்டு வேண்டுகின்றோம்
தேனிடை மருந்தினைச் சேர்த்துக் கொடுத்தல்போல்
தெய்வத்தின் தன்மை தன்னைத்
திறமாய் விளக்கிய இராமாநுசன் தன்னை
திடமுடன் காக்க வென்றே! 9

வாரணம் சூழ்கின்ற ஆரணத் தெய்வமகள்
மாணிக்க மணிமா மகள்
மங்கிடாத் தங்கமகள் பங்கயச் செல்வமகள்
வளரருளை வேண்டுகின்றோம்

தோரணத் தொடராகி மாரணம் கூட்டிடும்
தொட்டில் பழக்க வினைகள்
தூக்கிச் சரித்திடும் தாக்கித் தகர்த்திடும்
துன்பத்தின் ஊற்று வெள்ளம்

பூரணப் பண்புகள் புனிதத்தின் செய்கைகள்
பொடிபடச் செய்யும் வண்ணம்
பூத்திடும் எண்ணத்தைப் போற்றிடும் வார்த்தைகள்
போன்றபல் தீமை நீக்கும்

காரணம் பற்றிவரும் நாரணத் தேவனே!
கல்கியே! வேண்டு கின்றோம்
கலியுகக் குழவியாம் இராமானுசன் தன்னைக்
கருணையாய்க் காக்க வென்றே! 10

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

செங்கீரைப் பருவம்

கன்னல், இளநீர், கற்கண்டு,
கனியில் செம்மா வாழைபலா
கன்று குடிக்கும் ஆவின்பால்
காவில் பூக்கும் பூவின்தேன்

தின்னத் திகட்டா திராட்சையுடன்
தித்தித் திருக்கும் பேரீச்சை
சின்னச் சின்ன முந்திரிகள்
தின்பண் டங்கள் தீஞ்சுவைகள்

என்னும் இனிமைப் பொருள்களெலாம்
எண்ணத் திற்குள் நில்லாமல்
இசைவை எல்லாம் திசைமாற்றும்
எங்கள் தமிழின் வாழ்விடமாம்

தொன்மை மிக்க மண்பிறந்த
தூயோய்! ஆடாய் செங்கீரை
துறவோர் அரசே! பெருஞானச்
சுடரே! ஆடாய் செங்கீரை!

சிமிழைப் போலும் சிறுஅதரச்
செவ்வாய் மழலை பேசுகையில்
திட்டுத் திட்டாய் குழறிவரத்
தீரா இன்பம் ஊட்டுமொழி,

அமிழ்தம் போலும் இனிமையினை
ஆசை பொங்கப் பொழிகின்ற
அன்னை அவளின் சீராட்டில்
அன்பை ஊற்றும் அழகுமொழி;

குமிழாய்த் தோன்றி மறைகின்ற
கூற்றுக் குள்ளே சிறிதளவும்
கூடாமல் ஓர் நிலையான
கோலம் கொள்ளும் செம்மொழியாம்

தமிழின் மண்ணில் தோன்றியஎம்
தடமே! ஆடாய் செங்கீரை
தன்னிகர் இல்லா எதிராசச்
சதிரே! ஆடாய் செங்கீரை!

விண்ணில் ஏழாய் விரிகின்ற
வில்லில் வண்ணக் கணையாக
விடுபட்டுலவும் எழில் ஜாலம்
விழியைத் தாக்கித் தருமின்பம்,

மண்ணில் கண்ணன் கருணையினால்
வண்ணம் சிந்தும் சோலைதனில்
மலர்ந்த அழகுப் பூவீசும்
வாசம் ஊட்டும் நல்லின்பம்,

பண்ணில் ஆழ்ந்த செவியினிலே
பாயும் இனிய இசையின்பம்,
பலவாய்ப் பிரிந்த இன்பமெலாம்
படிக்கும் போதே நமைஈர்க்கும்

வண்ணத் தமிழின் வளநாட்டில்
வளர்ந்தோய்! ஆடாய் செங்கீரை
மங்காப் புகழே! எதிராச!
மறையே! ஆடாய் செங்கீரை!

வெள்ளை இதயம் கொண்டவர்கள்
வேடம் புனையா நல்லவர்கள்,
வேங்கை போலும் வலிமையுடன்
வீரம் செறிந்த வல்லவர்கள்,

உள்ளம் கொள்ளும் எண்ணத்தில்
உயர்ந்த வற்றை ஏற்பவர்கள்,
ஊட்டம் இல்லா நெறிமுறையை
ஊட்டி வளர்க்கா மானுடர்கள்

அள்ளிக் கொடுக்கும் நெஞ்சத்தால்
அடைந்த தங்கள் செல்வத்தை
ஆதரவற்றோர் தாம் வாழ
அன்பால் ஈவோர் இவரையெலாம்

கொள்ளும் இன்பத் தமிழ்நாட்டின்
கோனே! ஆடாய் செங்கீரை
கொள்கைச் செறிவே! எதிராசக்
குருவே! ஆடாய் செங்கீரை!

வானத் திடலின் அடையாளம்
வளர்ந்து காட்டும் செங்கதிர்போல்
வண்ணச் செறிவின் அடையாளம்
மலர்ந்து காட்டும் பூங்காபோல்

கானச் செறிவை அடையாளம்
கலந்து காட்டும் எழுசுரம்போல்
கவிதைச் செறிவை அடையாளம்
கனிந்து காட்டும் கற்பனைபோல்

தானம் தருமம் அன்புவழிச்
சாரம் கருணைப் பண்பையெலாம்
சாரும் உலகை அடையாளம்
சரியாய்க் காட்டும் தமிழ்நாட்டில்

ஞானச் செறிவாய்ப் பூத்தஎழில்
நயமே! ஆடாய் செங்கீரை!
ஞாயிற்றொளியே! பெரும்பூதூர்
நாதா! ஆடாய் செங்கீரை! 5

பச்சை நிறத்தில் மலைவரிசை
பனியைச் சூடும் சிகரங்கள்
பள்ளத் தாக்கு, சமவெளிகள்
படர்ந்து விரியும் வனவகைகள்

கச்சைத் துணிபோல் நீர்வீழ்ச்சி
ககனம் பிறந்த காற்றுவகை
காவிரி, வைகை, பொருநைநதி
கனிந்த பெண்ணை, பாலாறு

அச்சம் கலந்த பெண்போலே
ஆங்காங்குலவும் எழில்கோலம்
அவற்றின் இடையில் அழகாக
அசையும் செந்நெல் இயற்கையெலாம்

இச்சை கொண்ட தமிழ்நாட்டில்
இசைந்தோய்! ஆடாய் செங்கீரை!
எதிகள் வேந்தே! எம்பெருமான்
இளையோய்! ஆடாய் செங்கீரை! 6

தினமும் தமிழை ஓதிடுவோர்
தித்திப்பதிலே ஊறிடுவோர்
தென்றல் மொழியால் வருடிஒரு
தீக்காயத்தை ஆற்றிடுவோர்

கனமே இல்லா நெஞ்சத்தோர்
கல்விச் செல்வம் மிகவுற்றோர்
கலையின் நுட்பம் அதிற்தோய்ந்து
கவினைப் பாரில் தூவிடுவோர்

வனப்பு மிக்க வடமொழியும்
வளமை சார்ந்த தென்தமிழும்
வடமாய்ப் பிடித்து மறைகளெனும்
வண்ணத் தேரை உருட்டிடுவோர்

எனவே சான்றோர் பலர்வாழும்
இன்பத் தொண்டை மண்டலத்தில்
எழுந்த எங்கள் எதிராச!
இறையே! ஆடாய் செங்கீரை!

பக்திப் பயிரை பாரிடையே
பரவிக் கிடந்த களை நீக்கிப்
பாங்காய் விளைத்த அறவோனே!
பதமாய் ஆடாய் செங்கீரை!

புத்தி அழைக்கும் வழியெல்லாம்
புதுமை என்றே அலைவுற்றுப்
பொருள் கொண்டாரை ஆட்கொண்ட
புனிதா! ஆடாய் செங்கீரை!

தத்தி நடந்த சமயமதைத்
தரமாய் மாற்றி வளர்த்தவனே!
தமிழின் மணம்வாழ் பெரும்புதூர்
தகையே! ஆடாய் செங்கீரை!

முத்தி அளிக்கும் மூலத்தை
முதலாய்ப் பற்றும் என்றபடி
முழுவாழ்நாளும் பணிசெய்த
முனியே! ஆடாய் செங்கீரை! 8

அன்ன வயல்கள் சதிராடும்
அழகுச் சோழ வளநாட்டில்,
ஆன்றோர் சான்றோர் மிகுந்தபெரும்
அறிவுத் தொண்டைத் திருநாட்டில்,

இன்ன இவற்றின் இடைநின்ற
ஏற்றம் மிக்க நடுநாட்டில்,
இயற்கை எழில்கள் கொஞ்சிவர
இளமை காட்டும் மலைநாட்டில்,

வன்னம் இழையும் முத்தெல்லாம்
வளரும் பாண்டித் தென்னாட்டில்
வையம் புகழும் வடநாட்டில்,
வான்மண் திகழும் நாடுகளில்

மன்னும் மாயன் புகழ்சொன்ன
மணியே! ஆடாய் செங்கீரை!
மனிதப் பெரியோய் எதிராச!
மகிழ்வாய் ஆடாய் செங்கீரை! 9

உளமே! உள்ளில் வாழ்கின்ற
உணர்வே! ஆடாய் செங்கீரை!
உயர்வே! உயர்வில் ஒளிர்கின்ற
உருவே! ஆடாய் செங்கீரை!

களமே! அறிவுக் களஞ்சியமே!
கனிவே! ஆடாய் செங்கீரை!
கருவே! திருவே! நற்கலைக்
கடலே! ஆடாய் செங்கீரை!

தளமே! ஞானக் கோடோங்கும்
தருவே! ஆடாய் செங்கீரை!
தமிழே! வடமொழி மொழிவளத்
தளிரே! ஆடாய் செங்கீரை!

வளமே! எம்மை வாழ்விக்க
வந்தோய்! ஆடாய் செங்கீரை!
வாழ்வே! மாண்பே! எதிராச!
மகிழ்வாய் ஆடாய் செங்கீரை!

இராமாநுசர்
பிள்ளைத்தமிழ்

தாலப்பருவம்

கண்ணமுதம் எனும் கார்நிற வண்ணனை,
கடல்மிசை துயில்பவனை,
காதல் கசிந்திட, பாதம் பணிந்திடும்
காசினியின் பரனை,

விண்ணவ ரோடிசை பண்ணவர் பாடிடும்
வேதவிழுப் பொருளை,
வேடமெனப் பல நாடகமாடிட
மேதினி வருபவனை,

வெண்ணமுதக் கடல் தன்னில் மிதந்துநின்
மேனியை மென்மை தரும்
மெத்தை விரிப்பென நித்தம் விரித்ததில்
வீற்றிடச் செய்தவனே !

புண்ணிய பைங்நிற போகத் தரவதன்
பொலிவே! தாலேலோ.
பூத புரித்தலம் மீதினில் தங்கிய
புனிதா ! தாலேலோ.

கதிர்குலம் தோன்றிய கருமணி யுடனொரு
காவல் எனத்தோன்றி,
காடுமலைவன மேடுகளில் உடன்
கண்ணிமையாய்ச் சென்றோய்

எதிர்வரும் நன்மைகள் ஏற்றமிலாதவை
எனவரும் தீமைகளில்
இரவுபகல் என எக்கணமும்தினம்
இசைவினில் பணிசெய்தோய்.

அதிரடி செய்திடை அச்சம் பெருக்கிய
அசுரர்தமைச் சாய்த்தே
அண்ணலும் மீண்டரசோச்சிடவும் து
ஆகி உடன் நின்றோய்

சதிரிடும் அரவதன் சத்திய வடிவே!
தாலே தாலேலோ
சாதனையே! எம்இராமாநுசனே!
தாலே தாலேலோ.

ஓரிரவிற் சிறை உட்புற அறையினில்
ஒருத்தியிடம் தோன்றி
ஒளிந்த சங்கம் சக்கரமிவற்றை
உருவில் மறைத்ததன்பின்

காரிருளிற்சிறைக் காவலை மீறிக்
கஞ்சனை ஏமாற்றி
கடுகி விரைந்தொரு காற்று,மழை,ஈ
காலம் கடந்ததன்பின்

கூரிய வேலைக் கொண்ட திறத்தவர்
கோபர் நகர் சேரக்
கோமகனுக்கொரு குடையாய் விரிந்
கோலச் சரபத்தின்

சீரிய வடிவாய் பாரினில் உதித்த
தெளிவே! தாலேலோ
திண்மாலுக்கோர் திருவணையாகிச்
சிறந்தோய் தாலேலோ.

பாதாளத்திடை பதமாய்க் கிடந்து
பல்லாயிர மென்றே
படர்ந்த திருமுடி அடர்ந்து விரிவுறும்
பகுதியினால் தூக்கி

ஆதாரத்துடன் அண்டப் பரப்பில்
ஆணித் தரமாக
அழகுப் புவியின் அச்சைச் சுழற்றும்
அரவப் பேருருவே !

சேதாரத்தினில் சென்ற மதத்தினைச்
செம்மைப் படுத்தவே
செங்கோல் போலொரு முக்கோல் ஏந்திய
செல்வா ! எதிராசா!

வேதாரத்தினம் ஓதிய பூதூர்
வேந்தே ! தாலேலோ
விசையென நிலமிதில் இசைவுடனெழுந்த
விளைவே ! தாலேலோ.

பத்தியின் வடிவெனப் பரமனை அடையப்
பாதை வகுத்தவனே
பன்னீராழ்வார் பைந்தமிழ் மொழியைப்
பாரில் விரித்தவனே

முத்தியின் வடிவென முற்றிய அறிவே!
முகுந்த நாதனையே
முழுமுதலென்றே நெஞ்சிற் பதித்த
முனியே ! மாமுனியே!

சித்திரை நிலவென ஆதிரை நாளினில்
செழித்த எதிராசா !
சென்மம் விளங்கிட மந்திரம் சொல்லிய
செந்தமிழ் வேதியனே !

சத்திய வடிவே! சந்தன வாசச்
சரமே தாலேலோ
சமயம் பரப்பிய தானைத் தலைவ!
தாலே தாலேலோ.

அஞ்சன வண்ணத் தழகரசன் என
அகிலம் அழைத்(து) உருகும்
ஆயரின் வேந்தன் அன்பர்க் கெளியன்
ஆண்டாளின் துணைவன்

பஞ்சவருக்காய்த் தேரினில் ஏறி
பாரதப் போரிலே
பகையை அழித்திடப் பாடம் சொல்லிய
பார்த்த சாரதியை

தஞ்சமடைந்தே செய்த வேள்வியின்
தனியாப் பயனாகத்
தாரணியில் அருள் தளிராய்த் துளிர்த்த
தன்னந்தனி வடிவே !

விஞ்சிய புகழே! இளையாழ்வார் எனும்
விசையே! தாலேலோ
வீணைச் சுரமென மேனி ஒலிக்கும்
விளைவே! தாலேலோ.

நான்முகனின் துணை நாமகளின்முன்
நன்றாய் வலிகாட்ட
நான்முகனெடுத்த நல்வேள்வியிலே
நயமாய் உருவாகி

வான்முகமெழுந்து வளர்ந்த ஒலியால்
வண்ணப் புள்ளேறி
வாட்டம் தவிர்த்த வகையால் யானை
வாழ்த்தும் கரிவரதன்,

கான்முகம் பிரிந்து கவலை பிணைத்த
காலத்தில் உன்னைக்
கச்சி நகர்ப்பதி காட்டிக் கொடுத்த
காஞ்சிப் பெருமாளின்

தேன்மல ரடியை, தினமும் பற்றும்
தேவா! தாலேலோ
திகழும் கலியில் புகழின் உருவாய்ச்
செறிவோய்! தாலேலோ.

பெருமைஎனக் குலப்பிரிவில் தோன்றிடும்
பேற்றில் உயர்வில்லை
பெருமை இனத்தினில் பிறந்தபோதிலும்
பெரிதாய் ஒன்றுமில்லை

திருவின் மணாளனைச் சேர்ந்தவர் எந்தச்
சிறுசாதியர் எனினும்
செகத்தில் அந்தணர் களுக்கும் மேலே
சிறந்தார் எனச்சொல்லி.

வருணப் பிரிவினில் வகையாம் மூன்றினில்
மலர்ந்த பக்தி மலர்
வரதர்க்கன்பன் கச்சி நம்பியை
வணங்கி நின்றவனே

உருவப் பிரிவினை உணர்வால் இணைத்த
உயர்வே! தாலேலோ
ஒப்பில்லாத இராமாநுசனே!
உயிரே! தாலேலோ.

திரிவுபடத் தன் திறனை நுழைத்து
தெளிவைத் திரையிட்டுச்
சிந்தையிலுதித்த மந்தப் பொருளைச்
சிறந்த தென்றாக்கிப்

பிரிவுபடா தொரு நிலையினை அந்தப்
பிரமம் கொண்ட தென,
பிணைத்த கருத்தை இணைத்து வேதப்
பிரிவுகளைக் கூறி

அரிய கருத்தினை மறைத்த யாதவ
ஆசான் நெஞ்சத்தில்
அரியின் உயர்ச்சி அழகை எல்லாம்
அன்பின் வழியாலே

தெரிவு படுத்திய துறவோர் கூட்டச்
சீரே! தாலேலோ
தெய்வப் புலமை பெய்யும் முகிலே!
தேசே! தாலேலோ.

நீரிடையில்தன் நெஞ்சைச் செலுத்தி
நிதமும் பருகுபவன்
நேசத்துடனும் பாசத்துடனும்
நேமியை ஆளுபவன்

சூரிய தேவன் வரவில் மகிழ்ந்து
சுவையாய் இதழ்மலரும்
சுந்தரமிகுந்த செந்தாமரையினில்
துளிர்த்த செம்மையினைக்

கூரிய விழியில் கொண்டவனாம்எம்
கொண்டல் கருவண்ணன்
கொஞ்சும் வேதம் தஞ்சமடைந்தே
கூறும் பொருள் என்றே

நேரிய முறையில் பாரினிலுரைத்த
நெடியோய்! தாலேலோ
நெடுமாலடியே! இராமாநுசனே!
நிறைவே! தாலேலோ.

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

சப்பாணிப் பருவம்

திருக்கச்சி தேவராசன்

சப்பாணிப் பருவம்

தேம்பொழில்கள் சூழ்கின்ற அரங்கம் வாழ்ந்து,
தெய்வநெறி வைணவத்தைச் சிறக்கச் செய்து,
பாம்பணையியின் பரந்தாமன் புகழை இந்தப்
பாரினிலே பரப்பிவந்த ஆள வந்தான்
"ஆம் முதல்வன்" சமயத்தை வளர்க்க வந்த
ஆட்சியினன் எனவாழ்த்தி ஆசி சொன்ன
மேம்பயனே! உடையவனே! எதிகள் வேந்தே!
மிகையோனே! சப்பாணி கொட்டு வாயே.

உரமான ஞானத்தின் தோற்றமென்றும்,
உண்மையென்றும் எல்லையற்று விரிதல் என்றும்
பரவாது குறையாது விளங்கல் என்றும்,
பாரினிலே முதலில்லாப் பொருளே என்றும்,
தரமான குணமெல்லாம் இயற்கை யாகத்
தன்னிடத்தில் தாங்கிநின்று தனிமை காட்டும்
பரனாகும் பிரமத்தின் தத்து வத்தைப்
பகர்ந்தவனே! சப்பாணி கொட்டுவாயே.

சொல்லுகின்ற சொற்களிலே பொருளை மாற்றி
    சுவையழித்துப் பிரமத்தின் வடிவம் தன்னை
மெல்லுகின்ற வீணறிவின் பிடியில் சாய்த்து
    வேண்டாத உரைநிகழ்த்தும் ஆசானுக்கு
வெல்லுகின்ற மொழிகளினால் வேதச் சாரம்
    விரித்துரைத்து விளக்கமாக்கி ஆசா னிசை
கொல்லுகின்ற முயற்சியினை வென்று சாய்த்த
    கோவலனே! சப்பாணி கொட்டுவாயே.

அறிவின்றி இருளென்னும் மாயைக் குள்ளே
    ஆட்பட்டு மதிமயங்கும் உலகத் தாரை
முறிவின்றி முழுதாக மீட்டு வந்து
    முத்தான தமிழ்வேதம் கற்கச் செய்து
நெறியொன்று மாலவனைப் பற்றல் என்னும்
    நேர்த்திமிகு பாதையிலே இட்டுச் செல்லு
குறிகொள்வேன் எனச்சொல்லி, ஆளவந்தார்
    குறைதீர்த்தாய் சப்பாணி கொட்டு வாயே

மங்கலங்கள் கொடுத்துலகைக் காக்க வல்ல
    மாமுனிவன் வியாசமுனிச் சூத்தி ரத்தை
இங்குலவும் மக்களெல்லாம் உணரும் வண்ணம்
    இனிதான உரைசெய்வேன் என்று சொ
அங்கணுயிர் நீத்துவிட்டுச் சாய்ந்தி ருந்த
    ஆளவந்தார் அவர்கரத்து விரலில் ஒன்று
பங்கமொன்றும் இல்லாது நீளச் செய்த
    பைந்தமிழே! சப்பாணி கொட்டு வாயே.

திருமாலின் வரலாற்றை இயற்றி இந்தத்
திருவுலகைத் தெளிவுறவே செய்த யோகத்
திருவாளன் பராசரனின் பெயரை நல்ல
சிறப்பான வைணவனுக்(கு) இடுவேன் என்றும்
குருகூரன் வாய்மொழியைப் புவியோர் உய்யக்
குறையின்றிப் பரப்பிடுவேன் என்றும் கூறி
அருளாளன் ஆளவந்தான் விரல்கள் மூன்றை
அவிழ்த்தோயே! சப்பாணி கொட்டு வாயே.

முத்திநிலை பற்றியதோர் விவரம் தன்னை,
மூலத்தை அதைஅடையும் பாதை தன்னை,
உத்தமனாம் பெரியநம்பி அடைவாய் என்னும்
உத்தரவை உள்ளடக்கும் ஆறு வார்த்தை
அத்திகிரிப் பேரருளின் வாக்கி னின்றே
அன்பதனால் கொண்டவனே! முக்கோல் வேந்தே!
சித்திரையின் ஆதிரைநாள் தோன்றி வந்த
சீராளா! சப்பாணி கொட்டு வாயே.

பொற்கமலப் பூமலராள் மதிக்கும் வண்ணம்
புகழுடனோர் செல்வத்தால் வாழ்தல் பண்பா?
அற்பமது செருக்கன்றோ விளையும் என்றே
அடைந்திருந்த செல்வமெல்லாம் துறந்து வந்து
பற்றுடனே திருமாலின் பெருமை காக்கப்
பார்வையினை இழந்தகூரத் தாழ்வான் தன்னை
உற்றதொரு சீடனெனக் கொண்ட எங்கள்
உடையவனே! சப்பாணி கொட்டுவாயே. 8

பொய்யான பொருள்தன்னைத் தெரிந்திருந்தும்
போதித்து வாதிட்ட ஆசான் தன்னை,
மெய்யாகக் கொலைசெய்யத் திட்ட மிட்டு
வெற்றியினை இழந்திட்ட ஆசான் தன்னை,
ஒய்யாரப் பேயொன்று பெருமை எல்லாம்
உணர்த்திவிட வியப்புற்ற ஆசான் தன்னை
மெய்யான சீடனென ஆக்கிக் கொண்ட
வேதியனே! சப்பாணி கொட்டு வாயே. 9

கடல்சூழ்ந்த மண்ணுலகச் செல்வம், நித்தம்
களிப்பூட்டும் விண்ணுலகச் செல்வம் யாவும்
உடல்சூழ்ந்த உலகத்தார் உய்யும் வண்ணம்
ஊறுகின்ற கருணையினால் கொடுப்ப தற்குப்
படம்சூழ்ந்த பாம்பணையின் அரங்க நாதன்
பதமறிந்து தேர்ந்தெடுத்த எதிகள் வேந்தே!
திடம்சூழ்ந்த உடையவனே! இளையாழ் வானே!
திருக்கரத்தால் சப்பாணி கொட்டு வாயே. 10

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

முத்தப் பருவம்

திருமால் உகந்த அலைமகளை,
செங்கமலக் காடமர் பவளை,
சீராய்ப் பொலியும் குணம்யாவும்
சிறப்பாய் பெற்ற மலர்மகளை,

திருமா மகளாய் நாமத்தில்
தேவன் துணையாய்த் திகழ்பவளை,
செங்கண் மாலை ஒருநாளும்
சிறிதும் பிரியா துறைபவளை,

அருளைப் பொழியும் தூய்மையினை,
அகிலம் ஆளும் அன்னையினை,
ஆதரவற்றோர் மீதும்தன்
அன்பைப் பொழியும் பெரியவளை,

கருவாய்ச் சரணம் புகுமெங்கள்
கண்ணே! முத்தம் தருவாயே
காரேய் கருணை எதிராச!
கனிவாய் முத்தம் தருவாயே.

பகவானின்தாள் தாமரையைப்
பற்ற அழைக்கும் வழியாக,
பக்திச் சுவையின் செறிவாக,
பலகாலம் வாழ் நெறியாக,

மிகையாய் விருப்பம் கூட்டுவது
வேறொன்றில்லை எனவாக,
மிகவும் உதவும் பயனாக,
விமலன் உணர்வின் விளைவாக,

அகமே உவந்த ஒளிர்வாக,
அடியார் ஆக்கும் வடிவாக,
அன்றாடம் மால் தொண்டாள
அமைந்த சரணா கதியதனை

தகவாய்த் திருவை வேண்டியஎம்
தலைவா! முத்தம் தருவாயே
சத்தே! எங்கள் எதிராச!
தரமாய் முத்தம் தருவாயே. 2

எல்லாக் குற்றப் பிரிவுகளின்
எதிராய் நிற்கும் தட்டாக,
ஏற்றம் மிகுந்த நல்லவையில்
எழுமோர் மையத் தலமாக,

பல்லாயிரமாய்ப் பாரினிலே
படர்ந்த பொருளைக் காட்டிலும்ஓர்
பரந்த சிறப்பின் ஒன்றாக,
பல்லாயிரத்தின் அந்தமெனச்

சொல்லாய், செயலாய், சுயமாகச்
சுடரும் அறிவின் வடிவாக,
சூழத் தோன்றும் ஆனந்தச்
சுவையாய் ஒளிரும் நாரணனை,

சொல்லால் பாடிச் சரணமெனத்
தோய்ந்தோய்! முத்தம் தருவாயே
துயர்கள் கெடுக்கும் எதிராச!
சுகமாய் முத்தம் தருவாயே 3

நெஞ்சத்துக்குள் நினைவாக
நிற்கும் திருமால் உருவைவிட
நிதமும் நேராய்க் காண்கின்ற
நேர்த்தி மிகுந்த உருவமதை,

கொஞ்சம் கூட மாசற்றுக்
கூடிக் காணும் கணமெல்லாம்
குலவும் புவியின் அற்புதமாய்
கொஞ்சும் சிலையாம் ஓர்உருவை,

மிஞ்சும் அழகு, வாசத்தை,
வீசும் நளினம், ஆண்மையுடன்
மீட்டும் இளமை, இவைகொண்டு
விளங்கும் கோலச் சிலையுருவை,

தஞ்சம் என்றே சரணம்செய்
தலைவ! முத்தம் தருவாயே
சரணம் நீயே எதிராச!
சதுராய் முத்தம் தருவாயே.

எளிமை இயல்பை, ஏற்றத்தை,
இணையில்லாத தோற்றத்தை,
எடுத்துக் காட்டும் மூன்றுவகை
இறைமை வடிவ மணிமுடிகள்

ஒளிரும் மகர குண்டலங்கள்
ஒப்பில்லாத கழுத்தாரம்
ஒண்மார்பினிலே முத்துவடம்
ஒட்டி அணைக்கும் தோள்வளைகள்

குளிர்மேனியிலே திருமச்சம்
குருமா மணிப்பூண் கடகமெனும்
குற்றமிலாத அணிவகைகள்
குலவத் தோன்றும் செங்கண்மால்

துளிர்மென் தாளைச் சரணம்செய்
தூயோய்! முத்தம் தருவாயே
தொண்டே! இராமா நுசமுனியே!
சுவையாய் முத்தம் தருவாயே.

ஒன்றாய் மூன்றாய் ஐந்தாகி
உலவும் முக்தா ஆரங்கள்,
உதரப் பட்டம், அதன்பிடியில்
உடுத்தும் பீதாம்பர ஆடை,

மென்மைப் பீதக ஆடையதன்
மேலே விளங்கும் பட்டிகைநூல்,
விண்மண் அளந்த திருவடியில்
மேவும் சிலம்பு, முப்புரிநூல்,

சின்ன விரலில் கணையாழி,
சிறப்பு மிக்க புதியதென
சிந்தை நிற்கும் அதிசமாய்
சிலிர்க்கும் அணிகள் அணிந்தபடி

மின்னும் பரனைப் பாடும்எம்
மிளிர்வே! முத்தம் தருவாயே
மேன்மை மிகுந்த எதிராச!
விரைவாய் முத்தம் தருவாயே.

சங்கம், சக்கரம், கதை வில்லாய்ச்
சக்தி மிகுத்துச் சுடர்கின்ற
சற்றும் மழுங்காப் படைக்கலனைத்
தரிக்கும் செங்கண் பேரழகை,

தங்கும் திருவின் திருவாகி,
தவழும் நிழலாய்த் திருவின்பின்
சாரும் நீளாப் புவிமகளின்
தலைவன் ஆகித் திளைப்பவனை,

அங்கத்தரவன், கருடாழ்வான்,
ஆளும் சேனாபதியாழ்வான்,
அளவே இல்லா அடியார்கள்
அடிக்கீழ் சூழும் அழகரசை,

எங்கும் பாடும் எதிராச!
எங்கே முத்தம் தருவாயே
என்றும் வாழும் திருவழகே!
இதழால் முத்தம் தருவாயே.

போகத்திற்கே உரியதென
பொலியும் பொருள்கள் பல்வகையும்
பூட்டிச் சூட்டும் நன்மாலை
போன்ற போகச் சாதனமும்,

மேகம் மீட்டும் எழில்மலைகள்
மின்னிச் சுடரும் மணிமயமாய்
மிளிரும் கூடம் எனவாக
வளைந்த போகத் [illegible],

ஊகத்துக்குள் உலவாத
உயர்ந்த ஒன்றாய் அற்புதமாய்
ஓடும் நதிகள், ஒளிர்குளங்கள்,
உடையாய் மணியைப் பூண்டவர்கள்

பாகம் கொண்ட வைகுந்தன்
பற்றே பற்றென்(று) உடையவனே!
பரமன் பாதம் கதியென்று
படர்ந்தோய்! முத்தம் தருவாயே.

எல்லா உலகும் அதிலிழையும்
எண்ணற்றவையின் தோன்றலையும்,
ஏற்றம் தந்து காத்தலையும்,
ஈற்றில் அழித்து மாய்த்தலையும்

வல்லான், அவற்றை விளையாட்டாய்
வடிக்கும் தேவப் பெருமானை,
வரித்த எதையும் செயவல்ல
மாயன் பரமன் உத்தமனை,

நல்லா ரடியார் குறைதீர்க்கும்
நன்மை மிகுந்த குணஎழிலை,
நாடிச் சேரும் ஆபத்தில்
நயமாய்த் துணையாய் மிளிர்பவனை,

சொல்லாயிரனைச் சரணம்செய்
துறவே! முத்தம் தருவாயே
துலங்கும் வைணவ தருமத்தின்
தூணே! முத்தம் தருவாயே,

பெற்றாய், பெருமை செய்திட்டாய்,
பேறாய்த் தாயென்றானாய், நீ
பிறப்பைத் தந்தாய், தந்தையென
பேணிக் கொண்டாய், சுற்றத்தாய்,

உற்றான் ஆனாய், உறவானாய்
உண்மை ஆசான் எனஆனாய்
உள்ளத்து) அறிவென்றானாய், என்
உடமை எல்லாம் நீ ஆனாய்,

முற்றாய் ஆனாய், புகலற்றோர்
முதலாய்த் துணையென்றானாய், என்
முத்தித் தடமே! மோகனமே!
முகிலே! அருளே! சரணமென

பொற்றாமரையான் அடிபற்றும்
பொன்னே! முத்தம் தருவாயே
பூதூர் முனியே! எதிராசப்
புனிதா! முத்தம் தருவாயே.

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

வருகைப் பருவம்



அல்லிக்கேணி ஆயன்

முத்தி சிலரின் சொத்தென
  முடிவு செய்து பூமியை
வித்தகத் தனத்தினால்
  வீணடித்த வேளையில்
இத்தரைக்கு வந்ததை
  எளியவர்க்கும் தந்தஎம்
தத்துவத்தின் தோற்றமே!
  தத்தி வந்தருள்கவே.

பிறந்தெழுந்து மாய்ந்திடும்
  பிறப்பிலே உயர்ச்சியா?
சிறந்த சாதி என்பதும்
  திரிந்த சாதி என்பதும்
அறம்தரும் விளக்கமா?
  அடுக்குமா? எனக்குரல்
திறந்தஎம் புரட்சியின்
  செல்வ! வந்தருள்கவே.

மதம்மதம் எனக்கொளும்
மதம் பிடித்த மடமையில்
நிதம்நிதம் உளத்தினை
நிலைநிறுத்து வாரிடை
இதம்இதம் அரிப்பரன்
இணைப்பதம் வணங்கிடும்
விதம் புகன்ற வேதிய!
மெல்ல வந்தருள்கவே.

மாலவன் பதத்தினை
வாழ்வெனப் பிடித்தவர்
மாலவன் நினைப்பினை
மனத்திலே நிறுத்தினார்
ஞாலமுள் இவர்க்கிடை
நலியும் வேறுபாடிலை
கோலமாய்ப் பணித்தவா!
கூடி வந்தருள்கவே.

பன்னிரண்டு பேர்களாகி
பரமனைப் புகழ்ந்தவர்
இன்னசாதி என்பதை
இறையுணர்ந்து கண்டதா?
என்று கச்சி நம்பியை
ஏற்றி நின்று வாழ்த்திட
முன்பணிந்த இலக்குவ
முனிவ! வந்தருள்கவே.

மாயனாளும் பூமியில்
மாயமில்லை வாழ்வடா
தேயும் கனவு போலதைச்
செப்பி நிற்றல் தப்படா
ஓயும் வரையில் உள்ளதோர்
உனது கடமை ஆற்றெனப்
பாயும் உண்மை சொன்னஎம்
பதும! வந்தருள்கவே.

மிக்கவாய்ப் படித்தவன்
மிக்க செல்வம் கொண்டவன்
தக்க சாதியான்எனும்
தகுதிகள் அடக்கிய
முக்குறும்புகள் பெரும்
முக்தியைத் தராதெனும்
சிக்கலை உணர்த்திய
சீல! வந்தருள்கவே.

அருவுமாகி உருவமாய்
ஆளுகின்ற ஆற்றலோர்
உருவமாகும் கோயிலோ
உலகில் யார்க்கும் பொதுவென
திருக்குலத்தவர் தமைச்
சேவை செய்யக் கூட்டிய
மருவிலாத மாமுனி!
வருக வந்தருள்கவே.

வாழ்ந்து காட்டும் முறையினால்
வைத்திருக்கும் நெறியினால்
தாழ்ந்திருந்த போதிலும்
தலைசிறந்த பண்பினால்
சூழ்ந்து பேசும் சொற்களால்
சுடருகின்ற மானுடன்
ஆழ்ந்த வைண வன்எனும்
அரச! வந்தருள்கவே.

புல்இனத்தைப் போல்பல
பூமிமாந்தர் இனமதில்
நல்லினத்தைக் காட்டுமாம்
நல்ல உள்ளம் தானென
வில்லிதாசன் பெருமையை
வியக்க வைத்த வேந்தனே!
தொல்பெரும் புதூரதன்
சோதியே. நீ வருகவே.

இராமானுசர் பிள்ளைத்தமிழ்

அம்புலிப் பருவம்

அரங்கவல்லியுடன்
அரங்கநகர் அழகன்

விண்ணிலே மீன்களோடு
மின்னிடும் மதியே! உன்போல்
மண்ணிலே சீட ராக
வாய்த்தவர் பலபே ரோடும்
எண்ணிலா ஆற்ற லோடும்
இலங்கினான் எதிகள் வேந்தன்
அண்மையில் வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய்.

நாகமோ வாயில் கவ்வ
நகர்வதாய்ச் சொல்வார்; பூமி
பாகமோர் நிழலைத் தந்து
படர்வதை அறியார்; பாம்பின்
தேகமாம் இளையாழ் வான்மேல்
திரையிடும் நிழலே இல்லை
ஆகவே அழைக்கின் றான் ஓ!
அம்புலீ! ஆடவாராய்.

ஓட்டமாய்ப் புவியைச் சுற்றி
உண்மையாய் என்ன கண்டாய்?
நாட்டமாய் உன்னைப் போலே
நம்பியைச் சுற்றிச் சுற்றி
ஈட்டினான் மந்தி ரத்தை
எதிகளின் கோமான்; கையை
ஆட்டியே அழைக்கின் றான் ஓ!
அம்புலீ! ஆட வாராய்.

சூரியன் ஒளியால் அன்றோ
சுடர்கிறாய் மதியே நீயும்!
சீரிய ஞானத் தாலே
செகத்தினை ஒளிரச் செய்யும்
சூரியன் போன்றோன்; எங்கள்
தொல்பெரும் புதூரன்; அந்த
ஆரியன் வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய்.

வளர்கிறாய் சிலநாள்; எங்கோ
மறைகிறாய் ஓர்நாள்; வானில்
விளைகிறாய் முழுதாய் ஓர்நாள்
மெலிகிறாய் சிலநாள்; உன்போல்
வளம்மிகும் புகழால் நாளும்
வளர்பவன், ஆனால் தேயான்
அளவிலா ஞானிக் காக
அம்புலீ! ஆட வாராய்.

புத்தியைக் கோண லாக்கும்
பொறுப்பெலாம் உனதென் பார்கள்
இத்தரை மேலே கோணி
இளைப்பதும் அதனால் தானோ?
புத்தியில் கோணல் இல்லான்
பொலிபவன் உன்னைப் போலே
அத்தனே வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய். 6

நின்னொளி இரவில் வந்தால்
நிறைந்தவிண் மீன்கள் மங்கும்
உன்னையே போன்றோன் எங்கள்
உயரிய இளையாழ் வானும்
மின்னிய சமய மெல்லாம்
மெலிந்திடச் செய்தான்; அன்னோன்
அன்புடன் வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய். 7

வெள்ளையாய் ஆடை யிட்டு
விரைகிறாய் மெதுவாய் விண்ணில்
தெள்ளிய வைண வத்தைத்
திண்மையாய்க் காக்க உன்போல்
வெள்ளையாய் ஆடையிட்டே
விரைந்தவன் பெரும்பு தூரன்
அள்ளவே அழைக்கின் றான் ஓ
அம்புலீ! ஆட வாராய். 8

இந்துவே! உன்னைப் போல
இனியதோர் முகத்தைக் கொண்டோன்
சந்ததம் வளர்வோன், ஆனால்
சற்றுமோர் களங்கம் இல்லான்
எந்தையாய் ஏற்றம் கொண்டோன்
இலக்குவ முனிவன்; அந்த
அந்தரன் வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய்.

அலவனே! உன்னில் மூச்சின்
அடித்தளம் ஏதும் இல்லை
உலகினைக் காக்க வந்தான்
உணர்வெலாம் மூச்சாய் ஆனான்
நிலைபெறும் வழியைச் சொன்னான்
நீள்பெரும் பூதூர் யோகி
அலகிலான் வாவென் கின்றான்
அம்புலீ! ஆட வாராய்.



திருமலை நாதன்

ஸ்ரீ ராமாநுசர்

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

சிற்றில் பருவம்

இசையாப் பொருளைச் சொல்லியவன்
இனிமை தன்னைக் கிள்ளியவன்
யாதவனென்னும் ஆசானின்
எதிரில் பெருமை காட்டிடவே

அசையாதிருந்து நிலையாக
அரசன் மகளை நன்றாக
ஆட்டிப் படைத்த இராக்கதன்மேல்
அடிகள் பொருத்தி அரசமரம்

விசையாய் முறிந்து வீழ்ந்திடவே
விரட்டி அடித்த எதிராச!
வேண்டும் ஞானம் யாவினையும்
விளைக்கும் பாதம் பெற்றவனே!

திசைகள் போற்றும் திருவடியால்
செல்வா! சிற்றில் சிதையாதே
செழுமை கொஞ்சும் பெரும்பூதூர்
செல்வா! சிற்றில் சிதையாதே.

மங்க லங்கள் யாவினையும்
மட்டில்லாமல் தந்திடுமாம்;
மறைகள் நான்கின் உட்பொருளாய்
மலர்ந்த பழமைப் பெருநிதியாம்

தங்கும் பொங்கும் பாவமெலாம்
தணலைப் போலத் தீய்த்திடுமாம்
தனது வயத்தில் பூமியினை
தாங்கும் ஆற்றல் கொண்டதுவாம்

பங்கமிலாத மந்திரத்தில்
படிந்த உண்மைப் பொருளறிய
பாதம் நோக நடந்தவைதாம்
பற்றை வீழ்த்தும் உன்னடிகள்

எங்கள் குருவே! பொன்னடியால்
எளியோம் சிற்றில் சிதையாதே
இளையோய்! இராமா நுசமுனியே!
எங்கள் சிற்றில் சிதையாதே.

கோட்டியூரின் நம்பியிடம்
குழுவாய்ச் சென்று பொருள்கேட்டு,
கொணர்ந்த புனிதச் சாரமதில்
கொழித்த வேத மந்திரமாம்

வீட்டுப் பேற்றைத் தந்திடும் பேர்
விந்தை தன்னைச் செய்திடும் ஓர்
விண்மண் போற்றும் நாரணனின்
மேன்மை உரைக்கும் மந்திரமாம்

கூட்டிச் சென்று குடியோர்க்கு
குருவாய் இருந்து சொல்லிடவே
கோபுரத்தின் மேலேறி
குலவிய தாள்கள் நின்தாள்கள்

நாட்டில் ஒளிர்ந்த ஞானமெனும்
நதியே! சிற்றில் சிதையாதே
நறுமென் அடியால் பெரும்பூதூர்
நாதா! சிற்றில் சிதையாதே.

நானோர் மனிதன் நரகத்தை
நண்ணிச் சென்றால் தவறில்லை
ஞானி லத்தில் மாலடியார்
நற்பேறன்றோ பெறுவார்கள்

ஊனோர் உயிரை மூடிடும்இவ்
உலகின் மக்கள் பிறவிதனை
உய்வித்தருளும் பேரின்ப
உன்ன தத்தின் பொருள்அதனை

ஏனோ எவரும் சொல்லவில்லை
எளியேன் சொன்னால் தவறில்லை
என்றே சொன்னாய்; நம்பியினால்
எம்பெரு மானார் எனவானாய்

வானோர் தலைவன் திருவணையே!
வடிவே! சிற்றில் சிதையாதே
வண்ணத் தொண்டைப் பெரும்புதூர்
வளமே! சிற்றில் சிதையாதே.

குருவே உயர்ந்த இறையாகும்
குருவே உயர்ந்த நிதியாகும்
குருவே உயர்ந்த அன்பாகும்
குருவே மேன்மைப் பயனாகும்

குருவே கல்விச் செறிவாகும்
குருவே தகுந்த வழியாகும்
குருவே சிறந்த பேறாகும்
குருவே பேற்றின் தடமாகும்

குருவின் உயர்வைத் திருவாயால்
குழைத்துத் தந்த அரையரினை
குருவாய் ஏற்றிப் பெருமையினை
கூடச் செய்த குருநீயே!

திருவைக் கொடுக்கும் உன்னடியால்
சிறியேம் சிற்றில் சிதையாதே
செங்கைப் பூதூர் பெருஞானச்
சிமிழே! சிற்றில் சிதையாதே.

வீணர் தம்மைத் தொழுவதனால்
வீணர் வார்த்தை கேட்பதனால்
வீணர்க்காக உழைப்பதனால்
வினைகள் தீர வழியில்லை

கோணல் இல்லா மதியோடு
குடைபோல் விரிந்து துயர்போக்கும்
குருவால் இம்மை மறுமையெலாம்
குலவும் நன்மை நிலவிடுமே

பூணத் தகுந்த பண்புகளால்
பொலிந்த சான்றோர் ஐவரினைப்
போற்றி அவர்தம் அருளையெலாம்
புகட்டும் அடிகள் உன்னடிகள்

ஆணிற் சிறந்த அணியேறே!
அடியால் சிற்றில் சிதையாதே
அழகே! இராமா நுசராசா!
அடியோம் சிற்றில் சிறியாதே.

மிஞ்சும் திறமை இருந்தாலும்
விரிந்த அறிவைப் பெற்றாலும்
மிகுந்த செல்வம் அடைந்தாலும்
மேன்மை யாவும் உற்றாலும்

தஞ்சம் தஞ்சம் என்றே ஓர்
தகுந்த குருவின் திருவடியைச்
சற்றேனும்தான் நினையாதார்
சரிவார் உலகில் இதுஉண்மை.

விஞ்சும் நிலையைப் பெருஅறிவை
மேவா திருந்த ஊமைக்கும்
விளையச் செய்தவை உன்னடிகள்
வேந்தே! உன்றன் பொன்னடிகள்

கொஞ்சும் தாளால் எதிராசக்
குழந்தாய்! சிற்றில் சிதையாதே
கோலச் சுடரே! குருமணியே!
கொழுந்தே! சிற்றில் சிதையாதே.

மனதில் நிறைந்த ஆனந்தம்
மடையாய்ப் பொங்கி வெளியேற
மாலே! மாலே! பெருமாளே!
வருக! வருக! என்றழைத்து

நினைவில் நிற்கும் சிலைவடிவை
நிசமாய் நடத்தி மடிமீது
நிலையாய் அமர்த்தி மகிழ்வினிலே
நெடியோன் தன்னை அணைத்தவன் நீ.

கனவில் கண்ட நாரணனை
கண்டு பிடிக்க நெடுதூரம்
கடுகி நடந்த திருவடிகள்
கருவாய் விளங்கும் உன்னடிகள்

தனமே! மணமே! எதிராச!
தாளால் சிற்றில் சிதையாதே
தமிழ்மா நிலத்து பெரும்பூதூர்
தளிரே! சிற்றில் சிதையாதே. 8

தொன்மைப் பொருளைக் கற்பித்துத்
துலங்கி மிளிர்ந்த ஆசான்கள்
துறவே! உன்றன் திருமுடியின்
தொடர்பால் பெருமை பெற்றார்கள்.

பின்னில் தொடர்ந்த ஆசார்யர்
பின்னிப் படர்ந்த சீடர்கள்
பெரியோய் உன்றன் திருவடியால்
பிறவிப் பயனைப் பெற்றார்கள்

மின்னும் மணிமா மாலையிலே
மிளிரும் நடுநாயக மணிபோல்
வீற்று முன்பின் வாழ்ந்தோர்க்கு
மேன்மை செய்த எதிராச!

உன்றன் ஞானத் திருவடியால்
உதைத்து சிற்றில் சிதையாதே
உணர்வில் கலந்த பெருநிதியே!
உறவே! சிற்றில் சிதையாதே. 9

வாள்வில் சூலம் வேலென்னும்
வகையாய்ப் படைகள் பலவாலும்,
மந்திரங்கள் தந்திரங்கள்
மாயச் செய்கை எதனாலும்,

வேள்விக் கலைகள் செய்வினையை
வீழ்த்தும் முயற்சி பலவாலும்,
விலகா துறைந்து வாட்டியதோர்
வெறிகொள் பிசாசு நினதுதிருத்

தாள்கள் நனைத்த நீரொன்றால்
தனது பிடிப்பை விட்டதுவே
தன்னிக ரில்லாத் திருவடிகள்
தாரணி பொலிந்த உன்னடிகள்

நீள்வான் கதிர்போல் சுடர்அடியால்
நீஎம் சிற்றில் சிதையாதே
நெஞ்சில் வாழும் எதிராச!
நீஎம் சிற்றில் சிதையாதே,

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

சிறுபறைப் பருவம்



திருநாராயணபுரச் செல்வன்

எண்ணல் அலங்காரம்

ஒன்றெனக் கிடக்கும் குருதியின் வண்ணம்
உடலெல்லாம் ஒன்றுதான் எனினும்
ஒன்றெனப் பிணையும் உணர்விலை என்றே
உளமெலாம் பக்தியால் இணைத்தாய்
ஒன்றிடத் தகுந்த ஒருபெரும் பரமன்
உலகிலே நாரணன் என்றாய்
தென்னகத் திகழ்வே! எதிகளின் வேந்தே!
சிறுபறை முழக்கிநீ அருளே.

இருநிலைக் கொள்கை இப்புவி நிறுத்தி
இறைவனை விளக்கமாய்ச் சொன்னோய்!
இருவகை உலகின் எழில்நிதி வாய்க்க
இணையிலா உடையவன் ஆனோய்!
இருகரப் படையை வேங்கடத் தானும்
இசைவுடன் ஏற்றிடச் செய்தோய்!
திருவருள் சொரியும் பெரும்புதூர் முனியே!
சிறுபறை முழக்கிநீ அருளே.

முக்குணப் பொருள்கள் முதலெனப் போற்றும்
முதல்வனைத் தெளிவுறக் காட்ட
முக்கனிச் சாறாய் கத்யமோர் மூன்றை
முகிலென மொழியினால் தந்தோய்!
முக்குறும் பில்லா ஒருநெறி மட்டும்
முக்தியைக் கொடுத்திடும் என்போய்!
தெக்கணத் துறவே! முக்கழிச் செல்வா!
சிறுபறை முழக்கிடீ அருளே. 3

நான்மறைச் சாற்றைத் தீந்தமிழ் வார்க்கும்
நற்றிரு வாய்மொழி உணர்ந்தோய்!
நான்மறை முற்றும் மேன்மொழி இரண்டில்
நயம்படக் கற்றுணர்ந் தறிந்தோய்!
நான்முகன் துணையாள் நாமகள் வரித்த
நல்லதோர் உரைதனைச் செய்தோய்!
தேன்மலர் மதுவே! எம்எதி ராச!
சிறுபறை முழக்கிடீ அருளே. 4

ஐந்தலை வடிவே! ஆயிரம் நாவால்
ஆற்றலாய் வாதிட எழுந்தோய்!
ஐந்தென ஆசான் அரவணைப் பதனால்
அழகுறும் அரவணை வடிவோய்!
ஐந்தென அறிய வேண்டிய வற்றை
அடக்கிய மந்திரம் சொன்னோய்!
பைந்தமிழ் இராமா நுசமுனி வேந்தே!
ப[illegible]றை முழக்கிடீ அருளே. 5

ஆறென வார்த்தை அணியரு ளாளன்
அருளிட அதன்வழி சென்றோய்!
ஆறெனும் சமய ஆற்றலைத் திருத்தி
அறம்தரும் உண்மை புகன்றோய்!
ஆறென ஓடி அருளினைப் புகட்டி
அருமருந் தாகியே நின்றோய்!
ஏறெனும் இராமா நுசமுனிச் சீரே!
இன்பறை முழக்கிநீ அருளே. 6

ஏழெனும் சுரத்தில் இழைந்திடும் பண்போல்
இதயமுள் நாதமாய் ஒலித்தோய்!
ஏழெனப் பெயர்கள் இனிமையாய்ச் சூடி
யாவரும் வாழ்த்திடக் களித்தோய்!
ஏழென இலங்கும் எழில்மலை விளங்கும்
இறைவனுக் கோர்பொழில் அளித்தோய்!
சூழெழில் இராமா நுசனெனும் துறவே!
சுடர்பறை முழக்கிநீ அருளே. 7

எண்குணத்தானின் இயல்பினை, எழிலை,
இன்கவித் தொடரினால் வரித்தோய்!
எண்திசை தன்னில் விண்சுடர் போல
ஏற்றமாய் புகழினை விரித்தோய்!
எண்வகை எழுத்தின் மந்திரச் சுவையை
இத்தரை முழுவதும் வார்த்தோய்!
திண்திறல் இராமா நுசமுனிக் கோவே!
சிறுபறை முழக்கிநீ அருளே. 8

நவவிதத் தொடர்பை நல்கிடும் நாமம்
நாடறிந் திடும்படிச் செய்தோய்!
நவமணி போலே ஒன்பது துதிகள்
நாமலர் மலர்ந்துல களித்தோய்!
நவமென எழுந்து நயமென ஒளிர்ந்து
நற்பெரும் புரட்சிகள் செய்தோய்!
திவம்தரும் ராமா நுசமுனித் துறவே!
சிறுபறை முழக்கிநீ அருளே. 9

பத்தவ தாரப் பரமனின் நெறியைப்
பாரினில் பரப்பிய பண்பே!
பத்தென விளங்கும் கட்டளை தன்னைப்
பயின்றிடத் தந்தநல் துறவே!
பத்திரண் டாறு வருடமிப் புவியில்
பக்தியைப் பெருக்கிய குருவே!
சித்தனே! இராமா நுசமுனிக் கோவே!
சிறுபறை முழக்கிநீ அருளே. 10

[திவம்—முக்தி]

இராமாநுசர் பிள்ளைத்தமிழ்

சிறுதேர்ப் பருவம்

மூன்றுகுணம் கொண்டஉயிர் உயிரிலாப் பொருள்களில்
மூடுமோர் உருவ மாண்டு,
முகிழும்நிலை ஆண்டு, அவைவாழுமுறை ஆண்டு, அதன்
முரணாண்டு நிற்கும் எழிலை;

தோன்றிடும்ஐ வகையான வினைபாவ புண்ணியத்
தோற்றமதில் சேர்ந்து நிற்கும்
சூழ்ந்திடும் செய்கைகளின் பயனாகும் தீமைகளின்
தொடர்பிலாத் தூய ஒளியை;

தான்மருகி, காதலால் சேர்ந்திட்ட தென்புதுவை
தமிழ்மகளின் வார்த்தை தன்னை
தலைமீது தாங்கியே அடிசில் வெண்ணெய் ஈந்து
தமையனாய் மாறி நின்றோய்!

தேன்திரளும் சோலைமலை நம்பிக்கும் அடியனே!
சிறுதேர் உருட்டி அருளே
திருஒளிர வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே.

ஆன்றபெரு ஞானபல செல்வவீர்யம் மிகும்
ஆற்றலுடன் காந்தி யாகும்
அறுவகைக் குணமதைத் தன்னுளே கொண்டதோர்
அழகுமிகு சீல உருவை,

ஊன்றும் அடியாரினை ஆட்கொண்(டு) அவர்விரகம்
உடன்பொறா மென்மை அழகை,
உலகிதனில் எல்லார்க்கும் உரியனாகி நன்மை
உண்டாக்கும் அருளாழியை,

மேன்மைமிகு சீடனாய் தென்குறுங்குடி நகரில்
வீற்றிடச் செய்து செவியில்
விண்ணரசும் தருகின்ற மந்திரத்தை ஓதி
மிகுபெருமை கொண்ட குருவே!

தேன்திரளும் குறுங்குடியின் நம்பிக்கும் அடியவனே
சிறுதேர் உருட்டி அருளே
திருஒளிர வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே.

கொல்பவரின் கொடியவரின் இனிமையாம் ஒருவரும்
கூறமுடியா நெஞ்சமாம்,
கொடைகளைக் கைம்மாறு கருதாது தருகின்ற
குறைவிலாச் செல்வ நிதியாம்,

தொல்லைதரும் எதிரியையும் தனதாக்கி அடியார்க்குத்
துணையாக நிற்கும் அருளாம்,
துணையின்றி துணிகின்ற ஆற்றலாம், தடைகளைய
தோன்றாது செய்யும் உருவாம்,

மெல்லவிழி வளர்கின்ற தென்னரங்கன் வதனம்
மின்னி செவ்வரியோடி நீள்
விழிகளைக் காட்டியே வில்லிதாசன் நெஞ்சில்
விளைவினைச் செய்த எதியே!

செல்வநதி பொன்னிமேல் திகழ் அழகன் அடியனே!
சிறுதேர் உருட்டி அருளே.
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே.

நல்லோர்கள் என்பாரை எப்போதும் எண்ணியே
நாடுமோர் ஞான நலமாம்,
நல்லடியர் செய்ததோர் நன்மையை மறவாத
நன்றியின் மறுபிறப்பாம்,

கல்யாண குணமெலாம் தன்னிலே ஒளிவீசும்
கடலெனச் செறியும் கவினாம்,
கங்குகரை இல்லாத ஒலிபுருட ஒலியெலாம்
கைகோத்து பேசும் செறிவாம்,

நெல்லாளும் காவிரியை நிதமாளும் பரன், அவனை
நிசமாகக் காட்டும் உரையை
நெறியான தத்துவச் செறிவோடு தீட்டிய
நேயனே! இராமனுச!

செல்வா! பெரும் பூதூர் செந்தமிழ் வேதிய!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே.

புலனைந்தும் செய்கின்ற தீமையின் விடிவென்று
பொலிகின்ற ஐந்தாயுதம்
புவிதனில் பூத்தொளிர பூதபுரி வந்ததென
புகழ்கொள்ளும் வலிமை வடிவே!

உலகங்கள் யாவிலும் உலவிடும் எழிலெலாம்
ஒன்றான வடிவம் ஆகி
ஓங்கிடும் நற்றவப் பயனென்று வெளிவந்த
உருவமே! அறிவு முகிலே!

கலகங்கள் தோன்றிமதம் காட்டாற்று வெள்ளமாய்
கைவீசி வந்த பொழுது
கரையாகியே நின்று கலிவினையை வீழ்த்திஇக்
கடலுலகைக் காத்த திடமே!

திலகங்கள் போன்ற திருத் தலமெங்கும் சென்றவா!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே
சிறுதேர் உருட்டி அருளே. 5

தாமரைப் பூமீது சந்ததமும் வீற்றிடும்
தளிர்மாதின் நாதன்தன்னை,
சாற்றிடும் மாறனடி போற்றிப் பணிந்திட்ட
தமிழ்பாடும் இளைய முனியே!

நாமகள் சிரமேற்றி கொண்டாடி மகிழ்வண்ணம்
நாடுபுகழ் உரையை எழுதி
நான்முகன் துணைவிக்கு நல்லமணி அணியதனை
நயமாய்க் கொடுத்த சதிரே!

மாமலை போலாகி வித்தையெனும் நதிகளை
மண்ணினில் தோற்று வித்தோய்!
வாழ்வெனும் நெடுவழியில் வகையாய்ப் படர்ந்துநிழல்
வார்க்கின்ற ஞான மரமே!

தேமலரின் சோலையென மாமறையின் வாசமே!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே. 6

வந்தனைக் குரியமென் வார்த்தைதரும் ஓசையால்
வடிவழகு மணவாளனை,
வாயார வாழ்த்திடும் வயலாலி கலியனிடம்
மாறாத அன்பு கொண்டோய்!

நிந்தனைக் குரியதோர் அறிவின்மையால் தோன்றும்
நீசத்தை நீக்கும் நெறியே!
நிலையாக நித்தமும் சுடர்கின்ற ஞானமே!
நீள்கதிரின் மிக்க சுடரே!

அந்தனை, ஆதியை, செங்கமல வண்ணனை
அழகான கவிதை வரியால்
அணிமாலை சூட்டியே ஆனந்தம் கொள்வோரை
அன்பால் உகக்கும் கவியே!

சிந்தனைச் சிற்பியென திகழும் எழில் தேசிகா!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே
சிறுதேர் உருட்டி அருளே. 7

இவ்வுலக மக்களிடை ஏற்றத்தை செய்திட்ட
இணையிலாச் சேம நிதியே!
இருமையின் பயன்யாவும் எளிதிலே தருகின்ற
ஏந்தலே! எங்கள் கதியே!

எவ்வகையில் பொய்மைகள் இழையோடி னாலுமதை
இழிவாக்கும் தூய எதியே!
ஈனக் குறும்புகள் மூன்றினை முற்றுமாய்
ஏற்காது விட்ட சுதியே!

கவ்வியெழும் துன்பமும் கரையிலா இன்பமும்
கைதொடா அறிவு மதியே!
கடவுளைக் காண்பதில் தகுதிகள் இல்லையெனும்
காலப் புரட்சி விதியே!

செவ்வடிவ ஆடையில் செறிகின்ற எதிராச!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே. 8

பன்னிருவர் சூட்டிய பைந்தமிழ் மாலையைப்
பாரில் மணக்க வைத்தோய்!
பரமனடியார்கள் அவர் திருவடியிலாழ்ந்தபடி
பலவாறு தொண்டு செய்தோய்!

முன்னிழையும் ஆசான்கள் அவர் வழியில் வாழ்தலே
முடிவான இன்பம் என்றோய்!
முனிவன் மணவாளனாய் பின்வந்த காலத்தில்
முறைவாழ வடிவெடுத்தோய்!

தன்னிகரில்லாத ஒரு பிங்களநல் ஆண்டுதனில்
தரணியில் அவதரித்தோய்!
தாக்கும்மத யானைபோல் வாதம்செய் திடுவோரை
சந்திக்கும் சிங்கம் போன்றோய்!

தென்றலெனும் மென்மையே! தெளிவூட்டும் மழலையே!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே!
சிறுதேர் உருட்டி அருளே. 9

கடல்சூழ்ந்த உலகமும் கடல்வண்ணன் உலகமும்
களிப்புடன் என்றும் வாழ,
கலைவாணனே நினைக் கண்டெடுத்த எங்கள்
கவின்தமிழ் நாடு வாழ,

இடர்சூழ்ந்த சமுதாய நடையினை மாற்றிய
இனியபணி என்றும் வாழ,
இம்மியளவேனுமே வன்முறையிலாது நீ
ஏற்றிய புரட்சி வாழ,

சுடர்சூழ்ந்த வேதரச சுவையினைப் பருகியே
சுகமாக யாமும் வாழ,
சுந்தரச் சொற்களால் தகைவோடு நீசெய்த
சூட்சுமத் துதிகள் வாழ,

திடம்சூழ்ந்த சேயெனத் திகழுமெதிராசனே!
சிறுதேர் உருட்டி அருளே
திருபெருகி வளம்பாயும் பெரும்புதூர் யோகியே
சிறுதேர் உருட்டி அருளே.

பிள்ளைத் தமிழைப் பற்றி...

★ தமிழிலக்கியத்தில் சிற்றிலக்கியங்கள் என்று கூறப்படும் உலா, அந்தாதி, கலம்பகம், பரணி, தூது முதலியனவற்றுள் ஒன்று பிள்ளைத்தமிழ்.

★ கடவுளரையோ மனிதர்களையோ குழந்தையாகப் பாவித்து பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பத்துப் பருவங்கள் அமைத்துப் பாடுவது பிள்ளைத்தமிழ்.

★ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிறுபறை, சிற்றில், சிறுதேர் என்பவை ஆண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள்.

★ காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, கழங்கு, அம்மானை, ஊசல் என்பவை பெண்பால் பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள்.

★ பிள்ளைத் தமிழுக்கு இலக்கணம் விளக்கமாகக் கூறுகின்ற நூல் பாட்டியல் நூல் ஆகும். பன்னிரு பாட்டியல் வச்சணந்தி மாலை என்னும் வெண்பாப் பாட்டியல், நவநீதப் பாட்டியல், சிதம்பரப் பாட்டியல், பிரபந்தப் பாட்டியல், தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, முத்துவீரியம், பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு, பிங்கல நிகண்டு, பாரதி தீபம் என்பவை பிள்ளைத்தமிழின் இலக்கணத்தைத் தெரிவிப்பன.

★ பிள்ளைத் தமிழை வகுப்பாலும், ஆசிரிய விருத்தத்தாலும் பாடுவது மரபு.

★ காப்புப் பருவம் குழந்தை பிறந்து இரண்டாம் திங்களில் கூறப்படுவது. தெய்வங்களைப் பாட்டுடைத் தலைவராக்கி குழந்தையைக் காக்குமாறு வேண்டுவது காப்புப் பருவம்.

★ குழந்தை பிறந்த ஐந்தாம் மாதத்தில் நிகழ்வது செங்கீரைப் பருவம்.

★ தால் என வழங்கப்படும் தாலாட்டுப் பருவம் குழந்தை பிறந்து ஏழாம் மாதத்தில் கூறப்படுவது. குழந்தையைத் துயிலச் செய்ய பாடுவது தாலாட்டு.

★ சப்பாணிப் பருவம் குழந்தையின் ஒன்பதாவது மாதத்தில் நிகழ்வது. குழந்தையைக் கைகொட்டுமாறு கூறுவது இந்தப் பருவத்தில்தான்.

★ முத்தம் தரச் சொல்லி குழந்தையைக் கேட்பது போல் அமைப்பது முத்தப் பருவம். இது குழந்தைக்கு பதினொன்றாம் மாதத்தில் நிகழ்வது.

★ தளர் நடையிட்டு வரும் குழந்தையை வாவென்று அழைப்பதாகக் கூறுவது வருகைப் பருவச் செய்தி. இது குழந்தையின் பன்னிரண்டாம் மாதத்தில் நிகழ்வது.

★ குழந்தையின் ஒன்றரை வயதில் நிகழ்வது அம்புலிப் பருவம். நிலவைக் குழந்தையோடு விளையாட வா என்று அழைப்பதுபோல் அமைப்பது அம்புலிப் பருவம்.

★ குழந்தையின் இரண்டு வயதில் நிகழ்கின்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு அமைப்பது சிற்றில் பருவம். தாங்கள் கட்டும் சிறிய மணல் இல்லங்களைக் கலைக்காதே என்பது போல் இப்பருவப் பாடல்கள் அமையும்.

★ சிறுபறைப் பருவம் : குழந்தையின் மூன்று வயதில் சிறுபறையை முழக்குமாறு அழைப்பது மரபு.

★ சிறுதேர்ப் பருவம் : நான்காவது வயதடைந்த ஆண் குழந்தைக்கு விளையாட சிறுதேர் அளித்து அதனை இழுத்து வருமாறு பாடல்கள் அமைப்பது.

★ ஆண்பால் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுக்கு நான்கு வயது எல்லை. பெண்பால் பிள்ளைத் தமிழ்ப் பருவங்களுக்கு ஆறு வயது எல்லை.

மரபை ஒட்டி பிள்ளைத் தமிழ் இலக்கணத் தைப் பின்பற்றித் தற்காலக் கவிஞர் 'வாரஸ்ரீ ஆக்கியுள்ள இராமாநுசர் பிள்ளைத்தமிழ், தமிழ் உலகிற்கும், வைணவ உலகிற்கும் மிகச் சிறந்த ஒரு பரிசாகும்.

டாக்டர் மதி. சீனிவாசன்
எம்.ஏ., பி.டி., பிஎச்.டி.
தமிழ்ப் பேராசிரியர்/துறைத்தலைவர்
து. கோ. வைணவக் கல்லூரி
சென்னை–600 106

Printed at : Moovenhar Achagam, Madras-14